பட்டுக்கோட்டை பிரபாகர்



# பிருந்தாவனமும் நொந்தகுமாரனும்

## தூண்டிலில் சிக்கியவை

உன் இலக்கு..
நெருங்குவது
என் இலக்கு..
இடைவெளியை
நகர்த்திவிடத் துடிக்கிறது
காதலும், காலமும்!
-சிவபாரதி

களவும் கற்றுமற
என்றுதானே சொன்னார்கள்?
நீ காதலை ஏன்
கற்பித்து மறந்தாய்?
-முத்து ஆனந்த்

ஜன்னலோர பேருந்து பயணத்தில்
கவிதை தோன்றாதபடி
மனசெல்லாம் நிறைந்திருந்தது
நடத்துனரின் சில்லறை பாக்கி!
-ஆர்.சி.முத்துக்கண்ணு



மழை நின்றும்
தூவானம் விடவில்லை
அவள் போனதும்
அவள் தங்கை!
-என்.இளம்வழுதி

மறுமணம் புரியும் தம்பி..
கடைசிவரை கவலைப்படவேயில்லை..
தன் இளம்விதவை அக்காவுக்கு
மறுமணம் செய்வது பற்றி
-வெ.ராம்குமார்

காக்கும் கடவுள்
படத்தில் ஊர்ந்த
பல்லி இரையாகப்
பிடித்தது பூச்சியை! -ஜி.கே.எஸ்.மூர்த்தி



# பிருந்தாவனமும் நொந்த குமாரனும்

பட்டுக்கோட்டை பிரபாகர்

**[முன்] எச்சரிக்கை**

*வேண்டாம். வீண் முயற்சி. விட்டு விடுங்கள். நிச்சயமாகக் கிடைக்கப் போவதில்லை. இவ்வளவு சொல்லியும் பிடிவாதமாகத் தேடிப் பார்த்துவிட இறங்கினால்... பிறகு உங்கள் இஷ்டம். இந்த நாவலில் என் எச்சரிக்கையையும் மீறி உங்கள் கண்டுபிடிப்பு முயற்சியில் கதை என்பது கிடைக்காமல் போனால் புகார் சொல்லாதீர்கள். இது உயிர் எழுத்தின் நான்காவது எழுத்தை உங்கள் உதடுகளில் கொண்டுவர முயற்சிக்கும் நாவல். ஆகவே, வந்தாலும் வராவிட்டாலும் வாக்கியங்களுக்கு நடுவில் சிரித்துக் கொள்க.*




சென்னை. மத்தியசிறைச் சாலைக்குள்ளிருந்து கதிரவன் தன் பொற்கிரணங்களை விரித்து வெளிச்சம் பாய்ச்சிக் கொண்டிருக்கும் இந்தக் காலையில், வேப்பங்குச்சியால் பல் துலக்கிக் கொண்டே (பிரஷ் தர மாட்டார்களாம். பிடிவாதமாய்க் கேட்ட ஒரு கைதிக்கு அது அவசியம் இல்லாமலே பண்ணி விட்டார்களாம். 'கைதியின் நல்வாழ்வு' என்னும் தலைப்பில் தினமணிக்கு யாராவது இதை எழுதுங்களேன்) நான் பேசுவது உங்களுக்குக் கேட்கிறதா?

கேட்கவில்லை என்றால் ஒரு கார்ியம் செய்க. பதினைந்து பைசாவுக்கு ஒரு பிளேடு வாங்கி உங்களுக்குப் பிடிக்காத ஆசாமி யாரையாவது (என்னது? தமிழ் வாத்தியாரா?) பிடித்து மேலிருந்து கீழ் அல்லது இடமிருந்து வலம் ஒரு ரத்தக் கோடு போடுக. அதிவிரைவில் உங்களை என் தோழராகக் கொண்டுவந்து சேர்த்து விடுவார்கள். அப்போது நான் பேசுவது தெள்ளத் தெளிவாகக் கேட்கும்.

நான் பேசுவது அரசியல் பேச்சோ அல்லது ஆன்மீகப் பேச்சோ அல்ல. என் வாழ்க்கையின் சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், கணிதம் எல்லாம்.

இங்கே நானும் ஒவ்வொரு ஆசாமியாகத் தேர்ந்தெடுத்து ஆரம்பித்துப் பார்த்து விட்டேன். அவரவர்களுக்குத் தேவைப்படுவதால் யாரும் காது கொடுத்துக் கேட்கத் தயாராயில்லை. ஒரு மரண தண்டனை ஆசாமி தன் கொலைக்கு இரண்டாம் பாகமாக என்னைத் தேர்ந்தெடுக்கும் வரை போய்... என் சமயோசித புத்தி காரணமாகத் தப்பித்தேன்.

அந்த சமயோசித புத்தி என்னவென்று இலவசமாக, ஒரே தவணையில் உங்களுக்குச் சொல்லித்தரத் தயார். ஆபத்து சமயத்தில் உதவும். அந்தக் கொலைகாரப் பாவி கூரான ஆயுதத்தோடு என்னை நோக்கி வந்தபோது நான்



செய்தது இதுதான். சாஷ்டாங்க நமஸ்காரம்! நம் உடலின் முன் பகுதியின் அத்தனை பாகங்களும் தரையைத் தொடும் விதமாக... மிகவும் சுலபம்.

ஆக, காசு கொடுத்து என் கதையைக் கேட்கச் சித்தமாய் உள்ள உங்களிடம் மட்டும்தான் மனம், வாய் இரண்டையும் திறந்து சொல்லப் போகிறேன்.

நான் யார்?

நமது வட்ட வடிவமான, உங்கள் தாத்தா தலையைப் போன்ற பூமியின் மேல் அட்சக்கோடு, மகரக் கோடு, பூமத்தியக் கோடு இதெல்லாம் ஓடுகிறதல்லவா? கொஞ்சம் உற்று நோக்கினால் நம் பாரதம் கண்டுபிடித்திருக்கும் வறுமைக் கோடும் தெரியும். தெரிகிறதா? ஒரு சக்தி வாய்ந்த லென்ஸ் வைத்து உற்று நோக்குங்கள். அந்தக் கோட்டுக்கு மேலேயும் போகாமல், கீழேயும் போகாமல் கோட்டின் மேலேயே ஒரு ஜீவன் இப்படியும் அப்படியுமாக பாலன்ஸ் செய்து நடப்பது தெரிகிறதா?

அது நான்தான்.

எனக்கு ஊர் தஞ்சாவூருக்குப் பக்கத்தில் உள்ள ஒரத்தநாட்டுக்குப் பக்கத்தில் உள்ள பாப்பாநாட்டுக்குப் பக்கத்தில் உள்ள வீரக்குறிச்சி. உள்ளங்கையகல ஊர். காரில் போனால் ஒன்று, இரண்டு, மூன்று என்பதற்குள் ஊரைக் கடந்து விடலாம். ஊரின் ஒரே விசேஷம் சக்தி வாய்ந்த மாதா குடியிருக்கும் சர்ச்!

என் அப்பர் (ஒரு மரியாதைதான்) என் அறிவுக்கு விவசாயம் ஒத்துவராது என்று.காலேஜில் சேர்த்தார். எல்லா அப்பர்களைப் போல 'படிச்சி பெரிய கலெக்டரா வரணும்' என்றார். என்ன நியாயம் இது? ஒரு ஜில்லாவுக்கு ஒரு கலெக்டர் தானே? அத்தனை பேரும் கலெக்டர் ஆனால் பாவம் அரசாங்கம் என்ன செய்யும்? வீரக்குறிச்சிக்கு ஒரு கலெக்டர், பாப்பா நாட்டுக்கு ஒரு கலெக்டர் ன்று போட்டாலும் ஏராளம் பேர் மிஞ்சுவார்களே... அரசுக்கு இந்த தர்மசங்கடம் ஏற்பட நான் காரணமாக இருக்க விரும்பாததால் நான் கலெக்டர் ஆகவில்லை. பட்டதாரி ஆகிவிட்டால் என் திறமைக்கு பட்டதாரிகள் தொகுதியில் நிற்க வைத்து விடுவார்கள். எனக்கோ அரசியல் அலர்ஜி. எனவே பட்டதாரியாகவும் ஆகாமல் ஐந்தே ஐந்து பேப்பர்களை ஐந்தே ஐந்து வருடங்களாக பாக்கி வைத்திருக்கிறேன்.

நான் பாட்டிற்கு நான் உண்டு, என் வேலை உண்டு என்ற ஊர் சுற்றிக் கொண்டு, மாதாவுக்குத் திருவிழா நடக்கும் போது விடிய விடிய கொளுத்தும் வாண வேடிக்கை பார்த்துக் கொண்டு, தஞ்சாவூர் வந்து காலைக் காட்சி, மாலைக் காட்சி, இரவுக் காட்சி, நள்ளிரவுக் காட்சி என்று மொழி பாகுபாடின்றி படங்கள் பார்த்துக் கொண்டிருந்தது என் மாமனுக்குப் பிடிக்கவில்லை.

இந்த வரியில் நான் சுசித்ராவைப் பற்றிச் சில வரிகள் சொல்லிவிட வேண்டும். கிராமத்தில்கூட இப்படி நேர்த்தியாகப் பெயர் வைப்பார்களா என்று கேட்பவர்களுக்கு மட்டுமான விளக்கம்: 'சு' அவள் இனிஷியல். அப்பா பெயர் சுப்பையன். இவளுக்குத் தமிழ் மேல் காதல். அதனால் சுசித்ரா! மற்றபடி களைப்போடு வீடு திரும்பும் கணவனுக்கு ஹார்லிக்ஸ் கரைத்துத் தரும் விளம்பர சுசித்ராவுக்கும் இவளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

சுசித்ரா சுமாராக இருப்பாள். உலக அழகிப் போட்டி போல 'வீரக்குறிச்சி அழகிப் போட்டி' நடத்தினால் நிச்சயம் ஆறுதல் பரிசாவது பெற்று விடுவாள். சிரிக்கும் போது ஒரு கண்ணை மூடிக் கொள்வாள். ரொம்ப ஸ்டைலாக இருக்கும். ஆனால் ரொம்ப நாள் கழித்துத்தான் கண் அருகில் நரம்புக் கோளாறு என்றும், உதடு விரிந்தால் அந்த நரம்பு வெட்டுகிறது என்றும் தெரிய வந்தது.

ஆனாலும் பரவாயில்லை, உறவு விட்டுப் போகக் கூடாது என்று நம் தேசிய குணமான தியாக மனப்பான்மையுடன் அவளைத் திருமணம் செய்து கொள்வதாய்த் தீர்மானித்து அந்த ஆசைத் தீயை நெய், மண்ணெண்ணெய், பெட்ரோல், இண்டேன் கேஸ் எல்லாம் போட்டு வளர்த்து வந்த சூழ்நிலையில்தான் சுசித்ராவின் அப்பா-என் மாமன் என்னை அழைத்தார்.

''யெஸ் மாமா, வாட் மேட்டர்? சுசித்ரா, குடிக்கக் கொஞ்சம் வாட்டர்...''

''மாப்ளை, என் நெஞ்சைத் தொட்டுப் பாருங்க''

''ஜூரமா? மாட்டு டாக்டர் கிட்டப் போய் ஊசி போட்டுக்கிறதுக்கென்ன?''

''மாப்ளை, என் நெஞ்சு கொதிக்குது...''

''என்ன மாமா விளையாடறீங்க? கொதிக்கிறதுக்கு அதென்ன குழம்பா, ரசமா?''

''மாப்ளை, நீங்க நடக்கிறது கொஞ்சமும் சரியில்லை''

''ஓ, அதுவா? வர்ற வழியில கால்ல முள் குத்திடுச்சி. அதான் நொண்டி நொண்டி நடந்து வந்தேன். நாளைக்குப் பாருங்க... ஜோரா நடப்பேன்''

''அதில்லை மாப்பிள்ளை'' என்றபோது சுசித்ரா 240 வாட்ஸ் வெட்கத்துடன் கதவுக்குப் பின்னால் வந்து நின்று, ''இந்தாங்கத்தான் மோர்'' என்று டம்ளர் கையை மட்டும் நீட்டினாள்.

நான் வாங்கி, ''சுசித்ரா, தலை சீவிக்கிட்டிருக்கியா?''

''ஆமாம்...''

''அதுக்காக மோர்ல உன் தலைமுடியைப் போட்டு நான் சாப்பிட முடியுமா?'' என்று எடுத்துப் போட்டுவிட்டுக் குடித்து, ''சொல்லுங்க மாமா, என்னமோ சொல்ல வந்தீங்க...''

''சொன்னா கோவிச்சுக்கக் கூடாது''



''கோவிச்சுக்கிட்டாலும் சொல்லலை''

''நீங்க பொறுப்பு இல்லாம இருக்கீங்க''

''இப்படி குத்திக் காட்டாதீங்க மாமா. நாங்க ஏழைதான். அதுக்காக நீங்க சொல்ற அளவக்கு இல்லை. வீட்டுக்கு வந்து பாருங்க. துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு எல்லாம் நிறைய இருக்கு...''

''ஐய்யோ! நான் பருப்பைப் பத்திப் பேசலை. பொறுப்பு! பொறுப்புன்னு சொன்னேன்...''

''ஏன் ரெண்டு தடவை சொல்றீங்க? எனக்கென்ன காது செவிடா?''

''மாப்ளை, படிச்சு முடிச்சி வேலைக்கும் போகலை, விவசாயத்தையும் கவனிக்கலை. எந்த வகையிலேயும் ஒரு வருமானமும் ஏற்படுத்திக்கலை. உங்களுக்கு எப்படி நான் என் பொண்ணைக் கட்டி வைக்கிறது?''

''மாமா, எனக்கு வருமானம் இருக்கோ, இல்லையோ... மானம் இருக்கு, ரோஷம் இருக்கு, வீரம் இருக்கு. இன்னும் என்னென்னவோ இருக்கு. எனக்குப் பொண்டாட்டி சுசித்ராதான்னு யஜுர் வேதத்திலேயே எழுதி வச்சிட்டாங்க. அதை மாத்த யாராலயும் முடியாது''

''மாப்ளை, இவ்வளவு ரோஷமாப் பேசறீங்களே... அடுத்த மாசம் என் பொண்ணுக்குப் பரிசம் போட நான் தயார். நீங்க தயாரா?''

''இதிலே நான் தாயாராக... ஸாரி... தயாராக என்ன இருக்கு?''

''பரிசப் பணமா ஒரு லட்சம் நீங்க கொடுக்கணும். கொடுத்தாத்தான் அவளைக் கட்டி வைப்பேன்...''

''எவ்வளவு? எவ்வளவு?''

''ஒரு லட்சம்''

''ஒண்ணு போட்டு பக்கத்திலே அஞ்சி சைபர் மாமா. அச்சுப் பிழையாச் சொல்றீங்களா? யோசிச்சிச் சொல்லுங்க...''

''யோசிச்சுத்தான் சொல்றேன். ஒரு லட்சம்...''

''அடப்பாவி மாமா! சம்பல் பள்ளத்தாக்கை விடப் பெரிய கொள்ளையா இருக்கும் போலிருக்கே இது...''

''இருந்துட்டுப் போகட்டும்...''

''ஒரு லட்சத்துக்குக் கொஞ்சமே கொஞ்சம் குறைஞ்சா பரவாயில்லையா?''

''எவ்வளவு?''

''தொண்ணூந்தி ஒம்போதாயிரத்து ஐநூறு''

''நடக்காது''

''அய்யோ! இந்தக் கொடுமையைக் கேட்பாரே இல்லையா?''

'ஏன் இல்லை? நான் இருக்கிறேன்' என்று எவரும் ஆஜராகவில்லை. என் மாமன் தன் பிடிவாதத்தைத் தளர்த்துவதாகவும் இல்லை. 'ஒரு மாதம் டைம். லட்சம்

பணத்துடன் வந்தால் கல்யாணம். இல்லையேல் இல்லை' என்று கறாராகச் சொல்லிவிட...

நான் என் சேமிப்பைத் திரட்டிக் கொண்டு, பணம் சேர்க்க சினிமாவில் காட்டும் சென்ட்ரல் ஸ்டேஷனும், எல்.ஐ.சி. கட்டிடமும் உள்ள சென்னை வந்தேன் என் நண்பனைத் தேடிக் கொண்டு.




சேட்டை கோபியைப் பற்றிச் சற்று விசாலமாகச் சொல்லியாக வேண்டும்.

'சேட்டை' - நண்பர்கள் வட்டாரத்தில் வழங்கப்பட்ட பட்டம். கோபி அதை 'பாரத ரத்னா' மாதிரிக் கருதிக் கொள்வான். 'இந்த சேட்டை கோபி சொன்னா சொன்னதுதான்' என்று அவனே தன் பட்டத்தைச் சேர்த்துச் சொல்லிக் கொள்வான்.

கோபி, டவுசர் காலக்கட்டத்திலேயே பிரபல்யன். (இந்தப் புனைபெயர் யாருக்கேனும் தேவை எனில் நேரில் அணுகவும்.) அஞ்சாப்பு படித்த சிவகாமியை உதட்டில் என்றால் உதட்டில் முத்தம் கொடுத்த மாவீரன்.

''டீச்சர், இவன் என் வாயிலே கடிச்சிட்டான் டீச்சர்'' என்று சிவகாமி அழுதது நினைவிருக்கிறது.

''கோபி, வாடா இங்கே! அங்கே எல்லாம் கடிக்கக் கூடாது'' என்று கொண்டை போட்ட டீச்சர் அதட்டியதும்...

''வேற எங்கே கடிக்கலாம் டீச்சர்?'' என்று இவன் சாதுவாய் வினவியதும், டீச்சர் பிரம்பை ஓங்கி அடிக்காமலேயே இருந்ததும் நினைவிருக்கிறது.

கோபியை எந்த டீச்சரம்மாவும் சரி, வாத்தியாரய்யாவும் சரி அடிக்கவே மாட்டார்கள். அவனுக்கு எப்போதும் விசேஷ சலுகை உண்டு. காரணம்... பயம்!

ஜெயந்தி டீச்சர் ஒரு தடவை காதைப் பிடித்துத் திருகினதற்காக... வகுப்பறை வகுப்பறையாகப் போய் 'எட்மாஸ்ட்டரும் ஜெயந்தி டீச்சரும் லவ்வு பண்றாங்க' என்று கத்திவிட்டு வந்து விட்டான்.

அப்போதெல்லாம் லவ் என்பது மகா பெரிய கெட்ட வார்த்தை.

எச்.எம். கூப்பிட்டு, ''படவா ராஸ்கல், ஏண்டா அப்படிக் கத்தினே?'' என்று கேட்டபோது ஆறு வாத்தியார்கள் மத்தியில் பதில் சொன்னான். ''வெள்ளிக்கிழமை சாயங்காலம் கெமிஸ்ட்ரி லேபில பீரோவுக்குப் பின்னாடி நீங்க கட்டிப் பிடிச்சிக்கிட்டிருந்தது ஜெயந்தி டீச்சர் இல்லையா? அப்படின்னா வேற யாரு?''

எல்லோரும் சிரிக்க, ''கெட் அவுட்'' என்று கத்தின எச்.எம். முகம் எப்படிடா இருந்தது என்று இப்போது கேட்டாலும் மூன்று பக்கங்கள் சொல்வான் கோபி.



கோபிக்கு யாரிடமும் பயம் என்பதே கிடையாது. அவன் சத்தாய்க்காத டீச்சரே கிடையாது. புதிதாய் வந்த ஒரு தமிழ் டீச்சர் அவனைப் பெரிதும் விரட்டவே, யோசித்தான்.

'மாடு' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதச் சொன்னபோது எழுதினான்.

'மாடு - இரண்டு வகைப்படும். ஒன்று பால் தரும். மற்றொன்று தராது. பால் தரும் மாடு இரண்டு வகைப்படும். ஒன்று வெள்ளையாய் இருக்கும். அது பசு. மற்றொன்று கருப்பாய் எங்கள் தமிழ் டீச்சரைப் போல் இருக்கும். அது எருமை!'

கோபி ஒரு ஜெகதலப் பிரதாபி. பத்துக்கு இரண்டு மார்க் வாங்குவான். முன்னால் இவனாக ஒன்று போட்டுக் கொண்டு, ''எல்லாரையும்விட நான் நல்லா எழுதினேன்னு எனக்கு மட்டும் பத்துக்குப் பனிரெண்டு மார்க். கேக் வாங்க காசு தாப்பா'' என்று சுலபமாய் ஏமாற்றி வாங்கி வந்து விடுவான்.

கேக் வாங்க மாட்டான். ஒரு கத்தரிக்கோல் சிகரெட்டும், ஒரு பீடியும் வாங்கி என்னை காடு, மலை, புதர், பாலைவனம் எல்லாம் கடந்து ரகசிய இடம் ஒன்றுக்கு அழைத்துச் சென்று, ''உனக்கு பீடி, எனக்கு சிகரெட்'' என்று கொடுப்பான்.

இருமினால் பின் மண்டையில் பொளேர் என்று தட்டுவான். பீடி கொடுத்து, அதைப் புகைக்கும் முறையையும் சொல்லிக் கொடுத்ததெல்லாம் காரணமாகத்தான்.

குருதட்சணையாக நான் சில தகவல்கள் சேகரித்துச் சொல்ல வேண்டும். மாதா கோயில் அருகே வசிக்கும் ஒற்றை மூக்குக் குத்தின ராணி தண்ணி எடுக்க எத்தனை மணிக்க பைப்படி வருவாள் என்பதைத் துப்பறிந்து அவனுக்குச் சொல்ல வேண்டும். தவிர... ராணி சினிமாவுக்குப் புறப்படுகிறாளா, வெளியூர் போகிறாளா என்று அவ்வப்போது சி.பி.ஐ. வேலை எல்லாம் செய்து செய்தி அனுப்ப வேண்டும்.

அந்த ராணியின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் நான் இருந்ததே அவன் விசேஷ அன்புக்குத் தலையாய, உடலாய, வாலாய காரணம்.

கோபி ஒரு மாலையில் என்னை அவனுடைய சித்தப்பாவின் மாந்தோப்புக்கு அழைத்துச் சென்றான். என் கணக்கு நோட்டை வாங்கிப் புரட்டி, டர்ர்ர் என்று ஒரு பக்கத்தைக் கிழித்து, பேனாவைத் திறந்து வைத்து வானம் பார்த்து ஐம்பது நிமிடம் யோசித்து ஒரு வரி எழுதினான். அடித்தான். கிழித்துப் போட்டான். வேறு ஒரு பேப்பர் கிழித்தான். இப்படியாக என் கணக்கு நோட்டு பரிதாபமாக

ஒல்லியாகிப் போன பிற்பாடு ஒரு வழியாகக் கீழ்க்கண்டவாறு எழுதி முடித்தான்.

'ராணி, நான் உன்னை லவ்வு பண்றேன். நீ என்னை லவ்வு பண்றியா? இதுவரைக்கும் பண்ணலைன்னா, நாளைலேர்ந்து பண்ணு. உடன் பதில்.'

கடிதத்தில் கையெழுத்துப் போடவில்லை.

''டேய், நீ என்ன செய்றே... பைப்படி பக்கத்திலே சுண்ணாம்பு தடவின கொடிக் கம்பம் இருக்குதில்லே... நாளைக்கு காலையில சரியா ஒன்பது மணிக்கு அங்கே நில்லு. ராணி ஸ்கூலுக்கு அந்தப் பக்கமாத்தான் வருவா. யாராச்சும் உன்னைக் கவனிக்கிறாங்களான்னு பார்த்துட்டு அவகிட்டே போ. சேட்டை கோபி கொடுக்கச் சொன்னான்னு இந்த லெட்டரைக் கொடு. எப்ப பதில் தர்றேன்னு கேளு. ஜாக்கிரதையாச் செய்யணும். என்ன?''

கொள்ளைக் கூட்டத்தைப் பிடிக்க போலீஸ் போடும் திட்டத்தைப் போல ரகசியமாக இதைச் சொல்லிவிட்டு என்னிடமிருந்து கடிதத்தை வாங்கி அதற்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டு மறுபடி கொடுத்து, ''வெற்றியோட திரும்பு'' என்று ஆசீர்வதித்தான்.

நானும் பீர்பால் பிடித்த முட்டாளாட்டம் உற்சாகமாகத் தலையசைத்து விட்டு மறுநாள் காலை சலவை சட்டை, டவுசரில் கொடிக்கம்பம் அருகே காத்திருந்தேன்.

'வி' ஷேப்பில் தாவணி கட்டி, மடக்கிக் கட்டின இரட்டை ஜடைகளோடு குடை பிடித்த ராணி கொலுசு ஜல் ஜல்ல வர... நான் சமீபித்து, ஸ்டைல் சேர்த்துக் கொண்டு, ''ராணி, இதை...'' என்று கொடுத்து விட்டு நடுங்கினேன்.

நான்கடி வித்தியாசத்தில் நடந்து வந்த ராணியின் அப்பாவை அவள் குடை மறைத்திருந்தது. அதை உணராமல் நான் கொடுக்க...

''என்னடா இது?'' என்று ராணியின் கையிலிருந்து பிடுங்கிப் பார்த்த அவர் சூரசம்ஹார முருகனாய் எனக்குக் காட்சியளித்தார். ''கம்மனாட்டிப் பயலே!'' என்று என் முதுகில் போட்டு, கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துக் கொண்டு என் அப்பாவிடம் வந்து மூச்சிரைத்துக் கொண்டு நியாயம் கேட்டார்.

அப்பா தீர விசாரிக்காத பாண்டிய மன்னனாக ரூல் கழியைக் கையில் எடுத்துக் கொண்டு, ''ஏண்டா படவா, முளைச்சி மூணு இலை விடலை. உனக்கு லவ்வு கேக்குதோ?'' என்று கூடத்தில் என்னைத் துரத்த... லவ் செய்வதற்கு எதை முளைக்கவிட வேண்டும், அதென்ன மூன்று இலை கணக்கு என்பதெல்லாம் புரியாமல் மாட்டிக் கொண்டேன்.

''நானில்லைப்பா. சேட்டை கோபி, சேட்டை கோபி'' என்று நான் கத்தினதை எல்லாம் லட்சியம் செய்யாமல் கருமமே கண்ணாக விளாசி எடுத்து விட்டார்.

அப்புறம் கொஞ்ச நாளைக்கு கோபியோடு ஊடல் செய்தேன். அவனாகப் பேச வந்தபோது 'என்னோடு பேசாதே' என்றேன். கோபி அழுதான். ''என் காதலுக்காக நீ இப்படி அடி வாங்கிட்டியே?'' என்று விசும்பி விசும்பி அழ... அதுவரை அவன் அழுது நான் பார்த்ததே இல்லை.

அந்த அழுகையில் நான் கரைந்துபோக... எங்கள் நெருக்கம் அதிகரித்தது. பள்ளியிலும், வெளியிலும் எனக்கு ஏதாவது பிரச்னை என்றால் ஆதரவாக டாண் என்ற வந்து நிற்பான். எனது பாடிகார்ட், பாடி கவர், பாடி இன்லெண்ட் லெட்டர் எல்லாமே அவனானான்.

பாலகாண்டம் முடிந்து வாலிப காண்டத்தில் சேட்டை கோபிக்குப் படிப்பு ஒத்து வரவில்லை. புத்தகம் எடுத்துப் படித்தால் உடம்பெல்லாம் அரிக்கிறது என்று அப்பாவிடம் சொல்லி, அப்பா டாக்டரிடம் அழைத்துப் போய், உடம்புதான் முக்கியம், படிக்க வேண்டாம் என்று தீர்மானிக்க... நான் மட்டும் திருச்சிக்குக் கல்லூரிக்குப் போனேன்.

அவன் ஸ்க்ரூ டிரைவர், ஸ்க்ரூ க்ளீனர் எல்லாம் வைத்துக் கொண்டு ரேடியோ, சைக்கிளின் டைனமோ, ஸ்கூட்டரின் கார்பரேட்டர் என்று நோண்ட ஆரம்பித்தான்.

ஒரு காலகட்டத்தில் வெறும் கூழாங்கற்களில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டு அலைந்தான். தன் ஆராய்ச்சிக்கு கிராமம் வசதியாயில்லை என்று சென்னைக்குப் போனான். அவ்வப்போது கடிதங்கள் எழுதுவான். எப்போதாவது அவன் ஊருக்கும் வரும்போது அவனிடமே காட்டிப் படிக்கச் சொல்லி கேட்டுக் கொள்வேன். அவன் கையெழுத்து அவனுக்கு மட்டுமே புரியும்.

அப்பேர்ப்பட்ட சேட்டை கோபியின் யோசனையையும், உதவியையும் நாடித்தான் நான் பரிச சபதத்தோடு சென்னைக்கு நம்பிக்கையோடு வந்தேன்.




பஸ்சில் வந்த நான் ஊர் விழிக்கும் முன்பே தி.நகரில் இறங்கிக் கொண்டேன். அங்கே இறங்கி ஆட்டோ பிடித்து தன் திருவல்லிக்கேணி விலாசத்துக்கு வந்து விடலாம் என்று சேட்டை கோபி சொல்லி இருந்தது நினைவு வந்தது.

பாக்கெட்டில் எழுதி வைத்திருந்த அவன் விலாசச் சீட்டைத் தேடியபோது பகீர்! காணவில்லை! சட்டை, பேண்ட்டின் அத்தனைப் பாக்கெட்டுகளிலும் தேடினேன். ஊகூம்... கிடைக்கவில்லை.

ஏற்கெனவே இன்னும் சரியாக விடியவில்லை என்பதால் கொஞ்சம் இருட்டாகத்தான் இருந்தது. இந்த அதிர்ச்சியை உணர்ந்ததும் உலகமே எனக்கு இன்னும் இருண்டது.

ஒரு ஓரத்தில் பெட்டியை வைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டேன். யோசித்து யோசித்து ஒரு ஆசாமியின் பெயரும், ஒரு தொழில் பெயரும் கொண்ட தெரு என்று கிசுகிசு பாணியில் நினைவுக்கு வந்தது.

முதலில் திருவல்லிக்கேணி போய் விடலாம். அங்கே போய் விசாரிக்கலாம் என்று தீர்மானித்து காலியாகச் சென்ற ஆட்டோவை நிறுத்தினேன்.

''திருவல்லிக்கேணி போப்பா'' என்றேன்.

''அங்கே எந்த எடம்?'' என்றான்.

''அது அங்கே போய்த்தான் முடிவு செய்யணும்'' என்றதும் என்னை ஒரு அஞ்சி பைசா பார்வை பார்த்துவிட்டு வண்டியை எடுத்தான். ''ஊருக்குப் புதுசா?''

''புதுசா இருந்தா தள்ளுபடி எதுவும் உண்டா?''

''ஆமாம். அஞ்சி ரூபா குறைச்சுக்குவோம். அதுக்காகத் தான் கேட்டேன்...''

''என்ன ஒரு பாலிசி! நான் புதுசுதாம்ப்பா. புத்தம் புதுசு''

''அப்ப சரி'' என்று ஓட்டினான்.

ஏர் இந்தியா, இந்தியன் ஏர்லைன்ஸ் கட்டிடங்களைப் பார்த்தேன். ஆதித்தனார் சிலையைப் பார்த்தேன். எக்மோர் ரயில்வே ஸ்டேஷனைப் பார்த்தேன். அப்புறம் சென்ட்ரல் ஸ்டேஷன், பிராட்வே பஸ் ஸ்டாண்டு, ஹைகோர்ட், அப்புறம் கடற்கரைக் காற்று வாங்கிக் கொண்டு வரிசையாக சிலை மாந்தர்களை தரிசித்தேன்.

என்ன இது... இவ்வளவு தூரம் போய்க் கொண்டே இருக்கிறான்?

''இதோ பாருப்பா... நான் ஊருக்குப் புதுசுன்னாலும் எல்லா ரூட்டும் கரெக்டா தெரியும். என்னை ஏமாத்த நினைக்காம கரெக்டான ரூட்ல போ...''

''கரெக்டாதான் சார் போய்க்கிட்டிருக்கேன்...''

''அதானே பார்த்தேன்.''

சேப்பாக்கம் கிரிக்கெட் ஸ்டேடியம்... அப்புறம் கலைவாணர் அரங்கம் அருகே நிறுத்தி, ''இதுதான் திருவல்லிக்கேணி. எந்தத் தெரு?'' என்றபோது முற்றிலும் விடிந்திருந்தது.

''அதெல்லாம் நான் விசாரிச்சிப் போய்க்கறேன். எவ்வளவு ஆச்சி பாரு. என்கிட்டே பத்து ரூபாயாத்தான் இருக்கு. பாக்கி சில்லறை இருக்குதில்லே?''

''பாக்கியா? மீட்டரைப் பார்யா. இரநூத்தி அம்பத்தி ஏழு ரூபா...''

''என்னது? எங்க ஊர்லேர்ந்து மெட்ராஸ் வரவே அவ்வளவு இல்லை... உன் மீட்டர் ரிப்பேருய்யா...''

''யோவ்! மரியாதையா காசை எடுக்கறியா, இல்லை குடலை உருவட்டுமா?''

''தந்துடறேண்ணே, கரெக்டா தந்துடறேண்ணே. தள்ளுபடி சொன்னிங்களே, அந்த அஞ்சி ரூபாயையாவது குறைச்சிக்கிறிங்களா?''

''இன்னைக்கு ஞாயிற்றுக்கிழமை. தள்ளுபடி கிடையாது'' என்று பிடிவாதமாக வாங்கிக் கொண்டு அவன் சென்றதும் இனி சென்னையில் ஆட்டோவில் ஏறுவதே இல்லை என்று சபதமெடுத்தேன். கால்நடையாகவே போக வேண்டியதுதான். கால் வலித்தால் கால்நடை ஆஸ்பத்திரிக்குப் போய்... என்ன நான்? சேட்டை கோபியின் வீட்டைத் தேடாமல் உளறிக் கொண்டிருக்கிறேன்?

ஏரியா வந்தாயிற்று. அடுத்து தெரு கண்டுபிடிக்க வேண்டும். ஒரு பெட்டிக்கடை அப்போதுதான் திறந்து வைத்துக் கொண்டிருக்க... நான் போனேன்.

''சார், நான் புதிர் மாதிரி ஒரு தெரு பேரைச் சொல்றேன். நீங்க அது என்ன தெருன்னு சொல்லிடுவீங்களா?'' என்றேன்.

''ஏன்யா காலைலயே கழுத்தறுக்கறீங்க? புதிர் போட வந்தியா, வியாபாரம் பண்ண வந்தியா?''

''வியாபாரம்? பண்ணிட்டாப் போச்சு. அம்பது பைசாவுக்கு பாக்கு தாங்களேன்...''

அவன் முகத்தைச் சுளித்துக் கொண்டு எடுத்துத் தர-

''இப்போ புதிரைக் கேக்கறீங்களா?''

''சொல்லித் தொலைய்யா...''

''ஒரு ஆளோட பேரு, அதுக்கப்புறம் ஒரு தொழில் ரீதியான பேரு. அதுக்கப்புறம் தெரு. அது என்ன தெரு?''

''எனக்குத் தெரியலை. ஆளை விடுய்யா...''

''விட மாட்டேன். மெட்ராஸ்ல ஆள் ஆளுக்கு என்னை ஏமாத்தறதுன்னு தீர்மானிச்சிட்டீங்களா? வியாபாரம் பண்ணினாச் சொல்றேன்னு சொன்னியில்லே? சொல்லு...''

''நான் எப்பய்யா சொன்னேன்?''

''அப்படின்னா இந்தா உன் பாக்கு. அம்பது பைசாவைத் திருப்பிக் கொடு. அம்பது பைசான்னா சும்மான்னு நினைச்சியா? பூவா, தலையா போட உதவும். கொண்டா...''

''கடை திறந்ததும் எனக்குன்னு எங்கேர்ந்துய்யா வந்தே சாவுகிராக்கி?''

''வீரக்குறிச்சியிலேர்ந்து!'' என்று அம்பது பைசாவை வாங்கிக் கொண்டு எதிரே இருந்த ஒரு சலூனுக்குள் நுழையப் போனபோது...

பெட்டிக்கடைக்காரன் அங்கிருந்து கத்தினான். ''ஆறுமுகமண்ணே, ஒரு புதிர் போடறேன்னு உன் கழுத்தை அறுத்துடுவான். அவனை கடைக்குள்ளே ஏறவிடாதே!''

நான் பெட்டிக்கடைக்காரனை என்னிடம் ஸ்டாக்

இருந்த அத்தனைக் கெட்ட வார்த்தைகளையும் பயன்படுத்தி மனதுக்குள் திட்டிவிட்டு மேலே நடந்த போது தெருவின் முதல் பெயர் 'அருணாசல' என்பது நினைவுக்கு வந்து விட்டது. முக்கி முக்கி யோசித்தபோது 'ஆசாரி' என்பதும் நினைவுக்கு வர... அந்த தையல் கடைக்குப் போய் ரைட்ராயலாய்க் கேட்டேன்.

''ஏங்க, அருணாசல ஆசாரி தெருவுக்கு எப்படிங்க போகணும்?''

''அறிவு இருக்காய்யா உனக்கு?''

''வெளிநாட்டுக்குப் போறதுக்கு விசா தேவைப்படற மாதிரி அந்தத் தெருவுக்குப் போகணும்னா அறிவு இருக்கணுமா?''

''இதான்யா அந்தத் தெரு...''

''அடடே... இதுதானா? உங்களுக்கு சேட்டை கோபி தெரியுமா?''

''சவுண்ட் சர்வீஸ் நடத்தறானே, அந்த கிறுக்குப் பயலா?''

''ஒரு இளம் விஞ்ஞானியை அவமரியாதையாப் பேசாதீங்க. ஒரு நாள் இல்லைன்னா ஒரு நாள் அவனுக்கு பைபிள் பரிசு கிடைக்கப் போகுது...''

''பைபிளா?''

''அது மாதிரிதான் என்னமோ சொல்வாங்களே... ம்... நோபல் பரிசு கிடைக்கப் போகுது. எங்கே இருக்கு அவன் கடை? அதைச் சொல்லுங்க...''

''நேராப் போ. இருவது கடை தாண்டு...''

''அவ்வளவு தூரம் நம்மால தாண்ட முடியாதுங்க. நடந்தே போய்க்கிறேன்.''

நடந்து சேட்டைப் பட்டத்தை மறக்காமல் 'சேட்டை கோபி சவுண்ட் சர்வீஸ்' என்று எழுதின கடைக்கு வந்தேன். இன்னொரு சின்ன போர்டில் 'இவ்விடம் ஒலி பெருக்கிகளும், ஒலி பொறுக்கிகளும் வாடகைக்கு விடப்படும்' என்று எழுதி இருந்தது. கடையில் ஒரே ஒரு பொடியன் தான் இருந்தான்.

''சேட்டை கோபி எங்கடா?'' என்றேன்.

''மாடில நாஷ்டா பண்ணிக்கிட்டிருக்கார். உங்களுக்கு என்ன வேணும்?''

''முதல்ல அவன் வேணும். அப்புறம் நாஷ்டா வேணும். நகரு...''

பழைய இரும்புக் கடை போல கண்ட சாமான்களும் இரைந்திருக்க, எதையும் மிதித்து விடாமல் ஜாக்கிரதையாகக் கால் வைத்து கடைக்குள் புறப்பட்ட மரப்படிகளில் ஏறி மேலே வந்து என் சிக்ஸ் உயிர் நண்பனைக் கண்டேன். தரையில் அமர்ந்து பரோட்டா தின்று கொண்டிருந்தான்.

''கோபி'' என்றேன் உணர்ச்சிப் பெருக்கோடு.

கோபி இப்போது கண்ணாடி மாட்டியிருந்தான். அதைக் கழற்றிவிட்டு என்னைப் பார்த்து, ''வாடா நந்துப்பயலே... எப்படா வந்தே?'' என்று உணர்ச்சிவசப்பட்டவனுக்கு விக்கல் வந்து விட்டது. நான் தண்ணீர் எடுத்துக் கொடுக்க... குடித்து முடித்துவிட்டு, ''நீதானா? என் கண்ணையே என்னால நம்ப முடியலை'' என்றான்.

''அப்போ காதை நம்பு. நான் பேசறது கேக்குதா? நான்தான்...''

இந்த இடத்தில் இதுவரை காப்பாற்றி வந்த ஒரு ரகசியத்தை உடைத்து விடுகிறேன். அதாகப்பட்டது என் பெயர். அதை நான் சொல்லாமலேயே கதை சொல்ல, நீங்களும் கேள்வி கேட்காமல் இருந்தது சரியா? இருக்கட்டும். சொல்லி விடுகிறேன். நந்தகுமார். யாராவது முழுப்பெயர் சொல்லி அழைத்திருக்கிறார்களா என்று சிந்தித்துப் பார்த்தால் யாரும் இல்லை. சிலருக்கு நந்தா. சிலருக்கு நந்து. சேட்டை கோபிக்கு நந்துப் பயலே!

''நந்துப் பயலே, சாப்ட்டியா?''

''ஓ, நேத்தே சாப்ட்டுட்டேன்'' என்றேன்.

''இரு, வாங்கிட்டு வரச் சொல்றேன்'' என்று சுவர் ஓரமாகத் தொங்கின முடிச்சுப் போட்ட கயிற்றை இழுத்தான்.

''என்னடா செய்றே?''

''இதை இழுத்தா கீழே இரும்புத் துண்டு ஒண்ணு கட்டி வச்சிருக்கேன் கடையிலே. அது மேல டங்குன்னு ஒரு சத்தம் கேட்கும். உடனே பையன் ஏழைகளின் இண்ட்டர்காமிலே பேசுவான்''

''ஏழைகளின் இண்ட்டெர்காமுன்னா?''

''இதோ...'' என்று சற்றுத் தள்ளி தெருவில் சின்னப் பையன்களின் விளையாட்டுக்கு விற்கும் பிளாஸ்டிக் வயருடன் கூடிய டெலிபோனை எடுத்துக் காதில் வைத்துக் கேட்டுவிட்டு அதையே வாய்முன் பிடித்து, ''சீக்கிரமா ஓடிப் போயி ஒரு செட் பூரி, ஒரு செட் பரோட்டா, ஒரு செட் தோசை வாங்கிட்டு வாடா'' என்று விட்டு ஆணியில் தொங்கவிட்டான்.

''கடையிலே ஒரே ஒரு பையன்தானே இருக்கான்? மத்தவங்கள்லாம் இனிமேத்தான் வருவாங்களா?''

''மத்தவங்களா? கடைக்கு ஒரே பையன்தான்.''

''அவன் இப்ப போய்ட்டான்னா கடையை யார் பார்த்துப்பா? யாராச்சும் வந்து சாமான்களைத் தூக்கிட்டுப் போய்ட்டா?''

''நந்துப் பயலே, நம்ம கடையில திருட வந்தா பரிதாபப்பட்டு ஏதாச்சும் பணம் போட்டுட்டுத்தான் போவான்.''

''அதென்ன போர்டுல ஒலி பெருக்கிளும், ஒரு பொறுக்கிகளும்னு எழுதியிருக்கே?''

''ஒலி பொறுக்கின்னா மைக்குடா முட்டாள்.''

''ஓகோ. சரி, கூழாங்கல்லோர்ந்து மின்சாரம் எடுக்கிற

ஆராய்ச்சி இன்னும் செஞ்சிக்கிட்டுத்தான் இருக்கியா?''

''வாழ்க்கை லட்சியமே அதானே நந்துப் பயலே. கடைசிக் கட்டத்திலே இருக்கேன். அனேகமா வர்ற சனிக் கிழமைக்குள்ளே கண்டுபிடிச்சிடுவேன். சாப்பிட்டதும் நான் உன்னை என் ஆராய்ச்சிக் கூடத்துக்கு அழைச்சுட்டுப் போறேன்...''

''அது வேற இருக்கா? எங்கே?''

''இதோ இடது பக்கம் பாரு...''

பார்த்தேன். கள்ளிப் பலகைகள் கொண்டு அந்த நீள மான அறையைக் குறுக்கில் தடுத்திருந்தான். கள்ளிப் பல கைகளால் ஆன கதவு. அதன் மேல் ஒரு போர்டு. அதில்...

'அபாயம்!' இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் இரண்டு மண்டை ஓடுகள் படம். பெருக்கல் குறி அமைத்து எலும்புத் துண்டுகள் படம். கீழே...

**'அனுமதி இல்லாமல் உள்ளே வரக் கூடாது'**

''என்னடா கோபி அபாயம்னு போட்ருக்கே?''

''புரியாத பயலா இருக்கியே... மின்சாரம் அபாயம் இல்லையா? ஆராய்ச்சில திடீர்னு எக்கச்சக்கமா மின்சாரம் உற்பத்தி ஆயடுச்சின்னு வச்சிக்க... அது டேஞ்ஜர் இல்லையா? அதனால தான் முன்னெச்சரிக்கையா இரும்புக் கதவு போடாம மரக் கதவு போட்ருக்கேன். ரப்பர் செருப்பு போட்டுக்கிட்டு, ரப்பர் கிளவுஸ் போட்டுக்கிட்டுத்தான் ஆராய்ச்சி செய்றேன்...''

சென்னை வந்ததும் சேட்டை கோபி கொஞ்சம் தேறி விட்டான் என்று நினைத்துக் கொண்டேன். முன்பு வெறும் கையால் ஆராய்ச்சி நடத்தினவன் இப்போது கிளவுஸ் போட்டுக் கொள்கிறான் என்றால் அது முன்னேற்றம் தானே?

ஆனால் ஆராய்ச்சிக்கு அவன் எடுத்திருக்கும் சப்ஜெக்ட்தான் சிக்கலாய்ப் பட்டது. கூழாங்கல்லில் இருந்து மின்சாரமாவது? இது சாத்தியம் எனில் உலகம் முழுவதும் நீ வச்சிக்கோ, நீ வச்சிக்கோ என்று எதேஷ்டமாக உற்பத்தியாகும் மின்சாரத்தை பக்கத்து நாட்டுக்குத் தரக் கெஞ்ச மாட்டார்களோ?

ரொம்ப நாளாக மனதில் இருந்த சந்தேகத்தைக் கேட்டேன்.

''ஏண்டா கோபி, கூழாங்கல்லுக்குள்ளே மின்சாரம் இருக்குதா நிஜமா?''

''நந்துப் பயலே, என்னை என்ன வெட்டிப் பயல்னு நினைச்சியா? அஞ்சு வருஷமா இந்த ஒரே சப்ஜெக்ட்ல ஆராய்ச்சி பண்ணிக்கிட்டிருக்கேன்.''

''சரி, எதை வச்சி கூழாங்கல்லிலே மின்சாரம் இருக்குன்னு சொல்றே?''

''கேட்டியே இது நியாயமான கேள்வி. இதுக்கு சேட்டை கோபி பதில் சொல்லித்தான் ஆகணும். சுமார் ஒன்பது



வருஷங்களுக்கு முன்னால...''

''அதாவது ஒரு ஃப்ளாஷ்பேக் சொல்லப் போறே?''

''ஆமாம். அப்போ நான் டவுசர்தான் போட்டிருந்தேன்...''

''தெரியுமே, அதிலே பட்டனே இருக்காது.''

''ஆனாலும் ஊக்கு போட்ருப்பேன். கேளு, அன்னிக்கு நான் தூங்கிக்கிட்டிருந்தேன்...''

''வகுப்புலதானே?''

''இல்லை. என் சித்தப்பாவோட தோப்பு. அப்ப ஒரு விசித்திரம் நடந்திச்சி...''

''என்ன விசித்திரம்?''

''ஒரு கனவு...''

''கனவு காண்றதிலே என்ன விசித்திரம் இருக்கு?''

''கனவில இருக்கு. ஒரு தேவதை வந்து சேட்டை கோபி, எந்திரி, தூங்காதேன்னு சொன்னா. சாக்ரடீஸ் தாத்தா சொல்லிக் கொடுத்த மாதிரி ஏன்னு கேட்டேன். உன் வாழ்க்கையில் ஒரு பெரிய விஞ்ஞானி ஆகப் போறே. மக்களுக்குப் பயன்படுகிற ஒரு சக்தியை சுலபமா உற்பத்தி செய்ற வழியைக் கண்டுபிடிக்கப் போறே, உலகம் எல்லாம் உன்னைப் புகழப் போகுது. அதனால நீ தூங்காம சுறுசுறுப்பா இருன்னு சொன்னிச்சி.''

''அப்புறம்?''

''நான் கண்ணைத் திறந்து பார்த்தேன். எனக்கு மெய், பொய் எல்லாம் சிலிர்த்திருச்சி. எவ்வளவு பெரிய அருள் வாக்கு! இனிமே சோம்பேறித்தனமா தூங்கறதில்லைன்னு எழுந்து நடந்தேன். ஒரு பாறை வந்திச்சி. அதிலே ஏறி உட்கார்ந்தேன். யோசிச்சேன். மக்களுக்கு உதவற சக்தி எதுன்னு மூணு நாள் யோசிச்சேன்...''

''சாப்பிடாம, தூங்காமயா?''

''இல்லை. சாப்பிட்டுட்டு, தூங்கிட்டு வந்து பாறையில் உக்காந்து யோசிச்சேன், நாலாவது நாள் எனக்கு ஞானம் பொறந்திச்சி.''

''அடப்பாவி! கல்யாணமாகாமலேயே குழந்தையா? சரி, சிகப்பா, கறுப்பா?''

''நந்துப் பயலே! ஞானம்னா அறிவுடா...''

''அதுவரைக்கும் உன்கிட்டே அது இல்லாம இருந்திச்சா?''

''கேளு. நான் அவசரமா எழுந்தேனா, என் முழங்கை பாறை மேல பட்டுது. உடனே என் உடம்புல மின்சாரம் பாய்ஞ்ச மாதிரி ஒரு அதிர்ச்சி. கை மோதின இடத்தைப் பார்த்தேன். பாறையிலே நீட்டிக்கிட்டு ஒரு கூழாங்கல்! நான் முழங்கையை பாறையிலே வேற இடத்திலே எல்லாம் இடிச்சிப் பார்த்தேன். மின்சாரம் பாயலை. உடனே எனக்குப் புரிஞ்சி போச்சு. கூழாங்கல்லுக்குள்ளே மின்சாரம் இருக்கு. தேவதை சொன்ன சக்தி இதுதான். அன்னிக்கே தீர்மானிச்

சேன். ஆராய்ச்சியை ஆரம்பிச்சேன்...''

தேவதை, அருள் வாக்கு, ஆராய்ச்சிக் கூடம் என்று புலம்பும் அவனிடம் முழங்கை இடிபடும் போது உடலில் ஏற்படும் அதிர்ச்சிக்கான விஞ்ஞான காரணத்தை நான் விளக்க முயன்றால் நிச்சயம் உதைப்பான் போலிருந்தது. பேசாமல் இருந்து விட்டேன்.

டிஃபன் வந்தது. சாப்பிட்டேன்.

ஆராய்ச்சிக் கூடத்திற்குள் அழைத்துப் போகும் முன் ஒரு ஜோடி ரப்பர் செருப்புகள் தந்து என்னை அணியச் சொன்னான். உள்ளே வந்தோம். அது ஒரு ஆறடிக்குப் பத்தடி சிறிய அறை. அறையில் ஒன்றும் இல்லை. வெளிச்சமும் இல்லை. ஒரே ஒரு ஜீரோ வாட் பல்பு மட்டும் எரிந்தது.

கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்த போதுதான் பொருள்கள் தட்டுப்பட்டன. ஸ்டவ், ஸ்டவ் மேல் ஒரு குடுவை குடுவை நிறையக் கூழாங்கற்கள். ஸ்டவ்வின் வாயிலிருந்து ரப்பர் குழாய் புறப்பட்டு இன்னொரு குடுவைக்குள் சென்றது. அதிலிருந்து வேறு ஒரு குழாய் புறப்பட்டு கார் பேட்டரிக்குள் சென்றது. பேட்டரியிலிருந்து வயர்கள் புறப்பட்டு ஒரு அறுபது வாட்ஸ் பல்புடன் தொடர்பு கொண்டிருந்தன. இன்னொரு பக்கம் அரிசி மூட்டை அளவிற்குக் கூழாங்கற்கள்.

''உன் ஆராய்ச்சியை விளக்குறியா கோபி?''

''நந்துப் பயலே! அது எவ்வளவு ரகசியமானதுன்னு உனக்கே தெரியும். ஆனாலும் குறிப்பிட்ட ஒரே ஒரு ஃபார்முலாவைத் தவிர மத்ததெல்லாம் உன்கிட்டே சொல்றேன்'' என்று கனைத்துக் கொண்டான்.

நான் இந்தப் பக்கம் திரும்பிப் பார்த்து, ''ஆ!'' என்று அலறினேன்.

''என்னடா?''

''இது என்னது கூண்டுக்குள்ளே?''

''தெரியலை? ரெண்டு சுண்டெலிகள். பக்கத்திலே இன்னொரு கூண்டிலே பார்... முயல்!''

''எதுக்கு இதையெல்லாம் போய் வளர்க்கிறே? நாய் வளர்த்தாலாவது பிரயோஜனம் உண்டு...''

''இதுங்களுக்கும் பிரயோஜனம் உண்டு என் ஆராய்ச்சிக்கு. வரிசையா சொல்றேன், கேட்டுக்க. முதல் ஸ்டெப்- கூழாங் கற்களைத் தேர்ந்தெடுக்கிறது. எல்லா கற்களும் இந்த ஆராய்ச்சிக்கு உதவாது. வைரம் பார்க்கிற மாதிரி லென்ஸ் வச்சித் தேர்ந்தெடுக்கணும். கூழாங்கல் மேலே அரை இன்ச்சுக்கு ஒரு வெட்டு இருக்கிறதாய்ப் பார்த்துப் பொறுக்கணும்...''

''அதென்ன கணக்கு?''

''முதல் முதல்ல என் முழங்கைக்கு மின்சாரம் பாய்ச்சின



கல்லுல இந்த மாதிரி ஒரு வெட்டு இருந்திச்சி. ஸ்டெப் நம்பர் டூ. தேர்ந்தெடுத்த கல்லை நல்ல சோப்புப் போட்டு மண்ணு போகக் கழுவணும்...''

''அப்புறம்?''

''இந்த முதல் கண்ணாடிக் குடுவையிலே ஒண்ணு ஒண்ணா பாதி வரைக்கும் போடணும்...''

''குடுவை உடைஞ்சிடாது?''

''உடையாமப் போடறதுக்குத் தனிப் பயிற்சி வேணும். அப்புறம் வடிகட்டின தண்ணியை ஊத்தணும்...''

''எதுக்கு?''

''தண்ணியில மின்சாரம் உண்டு. அது இதைத் தூண்டும். அப்புறம் நல்லா கொதிக்க விடணும்...''

''அதெப்படி ஸ்டவ்வைப் பத்த வைக்காமலேயே கொதிக்க விடறது?''

''இந்த மாதிரி சின்னச் சின்னக் குறிப்புகள் கூடச் சொல்லணுமா? மின்சாரம் நீராவியோட கலந்து ரெண்டாவது குடுவைக்கு வரும்.''

''மின்சாரத்துக்கு திட வடிவமோ, திரவ வடிவமோ, வாயு வடிவமோ கிடையாதே...''

''உனக்கு மின்சார அறிவே கிடையாது. ஒரு இடத்திலே ஷார்ட் சர்க்யூட் ஆகி ப்யூஸ் போயிடச்சின்னா கேரியர் லேர்ந்து லேசா புகை வரும், பார்த்ததில்லையா? அதனால மின்சாரத்துக்கு வாயு வடிவம். இது மாதிரி அடிப்படைப் பாய்ண்ட்ல கேள்வி கேட்டா உனக்கு இந்த ரகசிய ஃபார்முலாவைச் சொல்ல மாட்டேன்.''

''சரி, கேக்கலை. மேல சொல்லு...''

''ரெண்டாவது குடுவையில மின்சாரத்தை சுத்தம் செய்றேன்...''

''அதென்ன அழுக்கா இருக்குமா?''

''கூழாங்கல்லிலே ஒட்டிக்கிட்டிருக்கிற ஒருசில மண்ணும் கலந்து வரலாமில்லையா? மின்சாரத்தை சுத்தம் பண்றதுதான் பரம சிரமமான வேலை.''

''ரெண்டாவது குடுவைக்குள்ளே என்னமோ தூளா இருக்கே, என்ன அது?''

''டிடெர்ஜண்ட் சோப்புத் தூள். தவிர வேற ஒரு ரசாயன மெட்டிரியல். இது ரெண்டும் எந்த சதவிகிதத்திலே கலக்கி வைக்கிறதுங்கிறதிலேதான் லேசா சிக்கல். இந்த ரேஷியோ கண்டுபிடிச்சிட்டேன்னா மின்சாரம் வொர்க் பண்ணும்...''

''வொர்க் பண்ணுமா?''

''இதோ பாரு, சுத்தப்படுத்தப்பட்ட மின்சாரத்தை வீக்காகிப் போன ஒரு கார் பேட்டரிக்குள்ளே செலுத்தினேன். அது பவரானதும் அதிலே கனெக்ஷன் கொடுத்திருக்கிற பல்பு எரியும். அன்னைக்குத்தான் என் ஆராய்ச்சி பரிபூரண வெற்றி அடையும்.''

நான் அந்த பல்பைக் கவலையாகப் பார்த்தேன். எந்த ஜென்மத்திலும் அது எரியப் போவதில்லை.

''சரி. எலி, முயல் எல்லாம் உன் ஆராய்ச்சிக்கு எந்த வகையிலே பயன்படுது?''

''உற்பத்தி ஆகிற மின்சாரம் நிஜ மின்சாரமா, போலி மின்சாரமான்னு எப்படி டெஸ்ட் பண்ணுவே? மின்சார உற்பத்தி ஆரம்பிச்சதும் ரெண்டு வயரையும் எலி மேல வைப்பேன். அது செத்துடுச்சின்னா நிஜ மின்சாரம்...''

''நீ கண்டுபிடிச்சதும் இதை வாங்கக் கூடாதா? எதுக்கு இப்பயிலேர்ந்தே தீனி போட்டு வளர்க்கறே?''

''இன்னைக்கே கூட கண்டுபிடிக்கலாம். யாருக்குத் தெரியும்? அந்தச் சமயம் எலியைத் தேடிக்கிட்டிருக்க முடியுமா? சரி, வா, வெளில போலாம். பிறத்தியாரை நான் ரொம்ப நேரம் அனுமதிக்கிறதில்லை...''

''மூட்டை நிறைய கல் வச்சிருக்கியே... எங்கே வாங்கினே?''

''வாங்கறதா? சேகரிச்சேன். எந்த ஊருக்குப் போனாலும் அந்த ஊர்ல பத்துக் கல்லு பொறுக்கிக்குவேன். என் ஒம்போது வருஷ சேமிப்புப் பொக்கிஷம்டா அது.''

''பாவம், நீ ஒரே ஆளா இவ்வளவு காரியமும் செய்ய வேண்டியிருக்கு.''

''இல்லை. ஒரு அசிஸ்டெண்ட் வச்சிருக்கேன். இன்னைக்கு ஞாயித்துக் கிழமை. அவனுக்கு லீவு. அந்த சுத்தப் படுத்துற ரேஷியோ கலக்கிறப்ப மட்டும் அவனை வெளில அனுப்பிடுவேன்.''

இருவரும் வெளியே வந்து கட்டிலில் அமர்ந்தோம்.

''சரி, நீ என்ன வேலையா மெட்ராஸ் வந்தே?''

''இப்பவாவது கேட்டியே...'' என்று ஆரம்பித்து என் சோக, சபதக் கதையைச் சொன்னேன்.மூன்று நாள் முள்ளு தாடியைச் சொறிந்து கொண்டு அவன் யோசித்தான்.

''ஒரே மாசத்திலே லட்ச ரூபா சம்பாரிக்கணும். அதானே உன் பிரச்னை?''

''ஆமாம்...''

''கைவசம் ஒரு அருமையான ஐடியா வச்சிருக்கேன்'' என்றான் சேட்டை கோபி.




சேட்டை கோபி சொன்ன ஐடியா என்னைச் சிந்திக்க வைத்தது. அட! எவ்வளவு நேர்மையான, சட்டப்படி நியாயமான வழி இது!

அதாகப்பட்டது - கள்ளக் கடத்தல் பொருள்கள் இருக்கிறது பாருங்கள். அவற்றை சுங்க அதிகாரிகளுக்குப் பிடித்துக் கொடுப்பது. எவ்வளவு மதிப்புக்குப் பிடித்துத் தருகிறோமோ அதில் பத்து சதவிகிதம் நமக்கு அரசாங்கம் அன்பளிக்கத் தயார்.

''ஆனா ஒரு சிக்கல் இருக்கு''

''தெரியும். தஞ்சாவூர் ஜில்லால இருக்கு'' என்றேன்.

''அதில்லைடா நந்துப் பயலே, பிரச்னை இருக்குன்னேன்...''

''என்ன பிரச்னை?''

''யாரு கள்ளக் கடத்தறான்னு துப்பறிஞ்சி கண்டு பிடிக்கணுமே...''

''சுலபமா அரசாங்கமே இப்படி ஒரு சம்பாரிக்கிற வழி வச்சிருக்கிறப்போ அதெல்லாம் பார்த்தா முடியுமா? துப்பறிஞ்சிடுவோம்...''

''தைரியம் இருக்கா உன்கிட்டே?''

''என்கிட்டே ஓவர் ஸ்டாக்கில இருக்கு. நீதான் ராணிக்கு லவ் லெட்டரை நேரடியாக் கொடுக்க தைரியமில்லாம என்னைத் தூது விட்டே. மறந்துட்டியா?''

''அதெல்லாம் அந்தக் காலம்டா. இப்போ என் தைரியத்தை எப்படி நிரூபிக்கட்டும், சொல்லு. யாருக்கு லவ் லெட்டர் கொடுக்கணும். சொல்லு, கொடுத்துட்டு வர்றேன்...''

''கோபி, நம்ம திட்டத்துக்கு வா. கள்ளக்கடத்தல் காரர்களை எப்படிக் கண்டுபிடிக்கலாம்?''

''இதெல்லாம் ரூமிலேயே யோசிச்சிக்கிட்டிருந்தா ஒண்ணும் நடக்காது. வா, போகலாம்...''

-என்று கொடியில் தொங்கின ஒரு சட்டையை எடுத்துப் போட்டுக் கொள்ளுமுன் கோபி அதை உதறினான். நான் தொடர்ச்சியாக ஐந்து முறை தும்மிவிட்டுப் புறப்பட்டேன்.

மரப்படிகளில் இறங்கிக் கீழே வந்தோம்.

கடைப் பையனிடம் ஒரு ஆசாமி சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தான்.

''என்ன இங்கே பிரச்னை?'' என்றான் கோபி.

''வாய்யா, நீதான் இந்தக் கடைக்கு முதலாளியா?''

''ஆமாம்.''

''ஒரு பெட்ரோமாக்ஸ் லைட்டு ரெண்ட மாசத்துக்கு முன்னாடி இவன்கிட்டே ரிப்பேர் செய்யக் கொடுத்தேன். இந்தா செய்றேன், இந்தா செய்றேன்னு இன்னும் செய்யலை. திருப்பிக் கேட்டாலும் தர மாட்டேங்கறான்...''

''அண்ணே, நீங்கதானே அதை...'' என்று எதையோ சொல்ல வந்த கடைப் பையனை அடக்கின கோபி, ''சார், உங்க பெட்ரோமாக்ஸ் வெளிநாட்டு பெட்ரோமாக்ஸ் இல் லையா? அதிலே ஒரு சின்ன பார்ட் நம்ம நாட்ல கிடைக் கலை. லண்டனுக்கு எழுதிருக்கேன். இன்னிக்கோ, நாளைக்கோ

வந்துடும். வந்ததும் போட்டு சரி பண்ணிடலாம்...''

''இப்படி பொறுப்பா பதில் சொன்னா கோபம் வராது. வரேன் சார். சீக்கிரம் சரி செஞ்சிக் கொடுத்துடுங்க..'' என்று விட்டு அவன் போனதும்...

நாங்கள் சாலையில் இறங்கினோம். எதிர் பக்கச் சுவரோரமாக நிறுத்தியிருந்த ஒரு வஸ்துவைப் பார்த்து, ''அது என்ன அது?'' என்று கேட்டேன். ''நம்ம பைக்குடா! நானே செட் செஞ்சேன். மொத்தம் மூவாயிரம் ஆச்சி. மண்ணெண்ணெய், வேப்பெண்ணெய், பாமாயில் இதில எது போட்டாலும் ஓடும்'' என்றான். எடுத்து வந்தான்.

அதை பைக் என்று நூறு பேர் சத்தியம் செய்தாலும் நான் நம்பத் தயாராய் இல்லை. இரண்டு சக்கரங்கள் மட்டுமே அதை ஒரு வாகனமாக அடையாளம் காட்டியது. மற்றபடி பித்தனைப் பகுதிகள் எல்லாம் இருந்தன. எனக்குத் தெரிந்து எந்த பைக்கிலும் பித்தளையில் உதிரி பாகம் கிடையாது. முன்சக்கரத்தின் போக்ஸ் கம்பிகளில் லேசாய் தொடும்படி ஒரு தகரத்தை வளைத்து வைத்திருந்தான். எதற்கென்று புரியவில்லை.

''போலாமா?''

''எதுக்காக இதை வேற தள்ளிக்கிட்டே போகணும் கோபி?''

''தள்ளிக்கிட்டா? பஞ்ச கல்யாணியை நீ அவமானப் படுத்தறே?''

''அது யாரு?''

''பைக் பேரு. இதை ஓட்டிக்கிட்டுப் போகப் போறோம் நாம்'' என்றவன் குனிந்து சைக்கிள் பெடலைப் பொருத்தி வைத்திருந்த ஒரு லீவரை வேகமாக மூன்று முறை சுற்றியதும்...

பைக்கின் உள்ளே சில ரசாயன மாற்றங்கள் நிகழ்ந்தன. மாவு மிஷினில் கருங்கல் போட்டு அரைப்பது போலச் சில சத்தங்கள். தொடர்ந்து லக்ஷ்மி வெடி வெடித்தது போல ஒரு சத்தம். தொடர்ந்து புகை மண்டலம்.

புகை கரைந்தபின், ''பஞ்சகல்யாணி ரெடி. பின்னால உக்காரு'' என்றான்.

மிகவும் பயந்து கொண்டே பின்னால் உட்கார்ந்த நான், ''டிராஃபிக் டிபார்ட்மெண்ட்ல இந்த வண்டியை ஒத்துக் கறாங்களா கோபி?'' என்று கேட்டது தப்பாகப் போயிற்று.

'என் வண்டியையா குற்றம் சொன்னாய்?' என்பது போல வளைத்து வளைத்து ஓட்ட ஆரம்பித்தான். சாலையின் ஒரு விளிம்பிலிருந்து, மற்றொரு விளிம்புக்கு கிராஸாகப் போய் அங்கிருந்து இங்கு கிராஸாக வந்து... எண்பது கி.மீட்டரில் விரட்டி... இரண்டு கைகளையும் யாரோ 'ஹாண்ட்ஸ் அப்!' சொன்னது போல வைத்துக் கொண்டு



ஓட்டி என்னை அலற வைத்து... அந்த வளைந்த தகரம் வேறு டமடம என்று எக்ஸ்ட்ரா சத்தம் செய்தது.

''உன் வண்டி மாதிரி வராது'' என்றதும்தான் சமாதானமானான்.

களைப்புக்கு ஒரு கடையில் நிறுத்தி மோர் சாப்பிட விரும்ப, ''மூணு கிளாஸ் மோர்'' என்றான் கோபி.

''எனக்கு ஒரு கிளாஸ் போதும்டா...''

''பஞ்ச கல்யாணிக்கு வேண்டாமா?'' என்று சத்தியமாக வண்டியின் பெட்ரோல் டாங்க்கில் ஊற்றினான். ''என்ன பார்க்கிறே? அப்படி எஞ்சினை செட் செஞ்சிருக்கேன். திரவ வடிவத்திலே இருக்கிற எதை வேணாலும் ஊத்தலாம். நடுக்காட்ல மாட்டிக்கிட்டே, எதுவுமே கிடைக்கலைன்னு வையி. உடனே...''

''சொல்லாதே கோபி. குமட்டுது...'' என்றேன். நிறைய ஊர் சுற்றினோம். பல இடங்களில் விசாரித்துவிட்டு இருவரும் வள்ளுவர் கோட்டம் வந்தோம். நிழலாய் ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டோம்.

''என்னடா இது, யாரைக் கேட்டாலும் முறைக்கறாங்க?'' என்றேன் சலிப்புடன்.

''அதானே... அப்படி என்ன கேட்டுட்டோம்? உங்களுக்கு யாராச்சும் கள்ளக் கடத்தல் ஆசாமியைத் தெரியுமான்னு கேட்டோம். இதிலென்ன தப்பு? தெரியும்னா தெரியும்னு சொல்லணும். தெரியலைன்னா தெரியலைன்னு சொல்லணும். அதை விட்டுட்டு அந்த முறை முறைக்கிறாங்களே... எப்படிக் கண்டுபிடிக்கப் போறோம்?''

நான் அயர்வாக ஒரு தூணில் சாய்ந்து கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கையை யோசித்தேன். ''இங்கேயே இரு'' என்றுவிட்டு சேட்டை கோபி எழுந்து தூரமாய்ச் சென்று மறைந்தான். எங்கே போனான் என்று புரியாமல் நான் காத்திருந்த போது...

ஒரு ஆசாமி வேகவேகமாக மூச்சிரைக்க என்னிடம் வந்தான். ஜீன்ஸ் பேண்ட், முழுக்கை சட்டை மேல் ஜீன்ஸ் ஜொர்கின். அதில் ஆறு ஜிப் வைத்த பாக்கெட்டுகள். இரண்டு டஜன் பட்டன்கள்.

''உன் பேரென்ன? சீக்கிரம் சொல்லு...'' என்றான்.

''ஏன், வாக்காளர் பட்டியலுக்காகக் கேக்கறீங்களா?''

''அட! சொல்லுய்யா!''

''நந்தகுமார்.''

''அட்ரஸ் சொல்லு...''

''வீரக்குறிச்சி அட்ரஸா, மெட்ராஸ் அட்ரஸா?''

''அய்யோ, மெட்ராஸ் அட்ரஸ் சீக்கிரம் சொல்லு...''

''கேர் ஆஃப் அட்ரஸ்தான். பரவால்லையா?''

''சீக்கிரம் சொல்லுய்யா...''

''நந்தகுமார். எழுதிக்கலையா?''

''மனசுல எழுதிக்கறேன். சொல்லு...''

''நந்தகுமார்...''

''அதையே எத்தனை தடவை சொல்வே? மேல சொல்லுய்யா...''

''வரிசையா ஆரம்பிச்சிதானே சொல்ல முடியும்? நந்தகுமார், கேர் ஆஃப் சேட்டை கோபி சவுண்ட் சர்வீஸ், அருணாசல ஆசாரித் தெரு, திருவல்லிக்கேணி. சரி, என்ன சமாச்சாரம்?''

''இதோ பார்...'' என்று லேஸ் அவிழ்த்து தன் ஷூவைக் கழற்றினான் அவன்.

ஷூவுக்குள் வைத்திருந்த கத்தியை எடுத்தான்.

''என்னய்யா கத்தியை ஷூவுக்குள்ளே வச்சிருக்கே? நடக்கறப்போ கால்ல குத்தாது?'' என்ற நான், ''ஆ!'' என்றேன், அவன் கத்தியை விரித்து என்முன் நீட்டியதும்.

''சத்தம் போடாதே. நான் சொல்றதைக் கவனமாக் கேளு...''

உடனே நான் நிமிர்ந்து உட்கார்ந்து, கைகளை மார்புக்குக் குறுக்கே கட்டிக் கொண்டு கவனமாக அவனைப் பார்த்தேன்.

''போலீஸ் என்னைத் துரத்துது''

''ஐ! நிஜமாவா?'' என்றேன் சந்தோஷமாய்.

''முட்டாள்! கேளுடா... நான் ஒரு பொருள் தர்றேன். அதை நீ பத்திரமா வச்சிக்கணும். ராத்திரி பன்னெண்டு மணிக்கு உன் அட்ரசுக்கு வந்து வாங்கிக்கறேன்...''

''பன்ணெண்டு மணிக்கு நான் நல்லாத் தூங்கிட்டு இருப்பேன். பத்து மணிக்கெல்லாம் வர்றதானா சரி...''

''பதில் பேசாம நான் சொல்ற மாதிரி செய்யப் போறியா, இல்லை கத்தியால குத்துப்பட்டு சாகப் போறியா?''

''பதில் பேசலை. என்ன பொருள் அது?''

தன் பாண்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு சின்ன ஒட்டப்பட்ட கவரை எடுத்துக் கொடுத்து விட்டு, ''சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கா? இதைப் பிரிச்சிப் பாக்காதே. பன்ணெண்டு மணிக்கு வருவேன். ஏதாச்சும் விவகாரம் செஞ்சே... ரெண்டு கண்ணையும் நோண்டி எடுத்துடுவேன்'' என்று விட்டு வேகமாக ஓடிப் போனான்.

நான் அந்த கவரைத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு பாக்கெட்டில் வைத்துக் கொண்டேன்.

சில நிமிடங்களில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்தார். என்னைப் பார்த்தார். என்னிடம் வந்தார்.

''ஒரு ஆள் இந்தப் பக்கம் ஓடி வந்தானா இப்போ?''

''அவன் எப்படி இருப்பான் இன்ஸ்பெக்டர் சார்?''

''உயரமா, ஜீன்ஸ் பாண்ட் போட்டுக்கிட்டு, ஷூ போட்டுக்கிட்டு...''



''லேசா தாடி வச்சிக்கிட்டு?''

''ஆமாம்... ஆமாம்... அவன்தான். எந்தப் பக்கம் போனான்?''

அவன் காட்டின கத்தி, அவன் குரலில் இருந்த அதிதீவிரம் என்னை உண்மை பேச விடவில்லை. கவரை எடுத்து ஒப்படைக்க பயமாய் இருந்தது.

''இந்தப் பக்கம் இன்ஸ்பெக்டர்...'' என்று போன பாதையை மட்டும் காட்டினேன்.

இன்ஸ்பெக்டர் விரைய... கொஞ்சம் இடைவெளி விட்டு நானும் விரைந்து என்ன நடக்கிறது என்று பார்த்தேன். தூரத்தில் ஒரு இளநீர்க் கடையில் முகத்தை மறைத்தவாறு இளநீரை தூக்கிக் குடித்துக் கொண்டிருந்த அவனை இன்ஸ்பெக்டர் பார்த்து விட்டார்.

உடனே ஓடினார். அவன் இளநீர் முழுக்கக் குடித்து முடித்துக் குனிந்தபோது அவன் கையைப் பற்றி முறுக்கி இழுத்துச் சென்றார். அங்கே இருந்து அவன் என்னைப் பார்த்துவிடக் கூடாதென்று நான் என் பழைய இடத்திற்குத் திரும்பினேன்.

''எங்கடா போனே?'' என்றான் கோபி.

''நான் கேக்க வேண்டிய கேள்வி இது...''

''சரி, கேளு...''

''எங்கடா போனே?''

சேட்டை கோபி தன் இரண்டு பாண்ட் பாக்கெட்டுகளிலும் தட்டிக் காண்பித்தான். இரண்டு கை நிறையக் கூழாங்கற்களை எடுத்துக் காண்பித்தான். போட்டுக் கொண்டான்.

''இங்கே கிடைக்கிற கற்கள்ல அந்த வெட்டுக் கற்கள் அதிகமாக இருக்கு...''

''உன்னோட பெரிய ரோதனைடா. இங்கே பத்து நிமிஷத்திலே என்ன என்ன நடந்துருச்சி தெரியுமா?''

''ஏன், என்ன ஆச்சி?''

நான் அவனுக்குப் புரியும்படியாக மூன்று விதங்களில் சொல்ல வேண்டியிருந்தது.

''ஏண்டா போலீஸ் கிட்டே கவரைக் கொடுக்கலை?''

''அந்தக் கத்தியை நீ பார்த்திருந்தாக் கேக்க மாட்டே...''

''அவனை இன்ஸ்பெக்டர் பிடிச்சதுக்கப்புறம் கொடுத்திருக்கலாமேடா...''

''ஜாமீன்ல வந்ததும் நேரா என்னைத் தேடித்தான் வருவான்...''

''முட்டாள்! ஏன் உண்மையான அட்ரஸைக் கொடுத்தே? மாத்திக் கொடுத்திருக்கலாமே...''

''விபரம் புரியாம சொல்லித் தொலைச்சுட்டேன்டா...''

''பெரிய வில்லங்கமாப் போச்சே. இந்தக் கவர்ல என்ன இருக்கு?''

''அவன் லாண்டரி ரசீதா இருக்கும்னு நினைக்கிறேன்.''

''அதை ஏண்டா ஒட்டணும்? ஏன் பிரிக்காதேன்னு சொல்லணும்? இதிலே ஏதோ பெரிய சமாச்சாரம் இருக்கு. நந்துப் பயலே, நேரா நம்ம ஆராய்ச்சிக் கூடத்துக்குப் போகலாம். இந்தக் கவரைப் பிரிச்சது தெரியாம பிரிக்க ஒரு மூலிகை வச்சிருக்கேன்...''

''மூலிகையா? அது வைத்தியத்துக்குத்தானே பயன்படுத்துவாங்க?''

''வாடா, பேசாம!''

பஞ்ச கல்யாணியை டமடம செய்து கொண்டே தன் சவுண்டு சர்வீசுக்கு அழைத்து வந்து விட்டான் கோபி.

''ஏண்டா, நிஜமாவே அவரோட பெட்ரோமாக்சுக்கு லண்டன்லேர்ந்து பார்ட்ஸ் வரவழைக்கப் போறியா?''

''வியாபார சூட்சுமம் புரியாமப் பேசறியே... அதை எப்பவோ ரிப்பேர் பார்த்துட்டேன்...''

''பின்னே, கொடுத்துட வேண்டியதுதானே?''

''தினம் வாடகைக்குப் போயி அஞ்சும் பத்தும் சம்பாரிச்சிக் கொடுத்துக்கிட்டிருக்கு. இப்ப என்ன அவசரம் கொடுக்கறதுக்கு?''

''அடப்பாவி!''

''வாடா! பெரிய பாவத்தைக் கண்டுட்டே...'' என்று மாடிக்கு அழைத்து வந்தான். முறுக்குக் கயிறைப் பிடித்து இழுத்து, வயர் டெலிபோனில், ''ரெண்டு டீ வாங்கிட்டு வாடா'' என்று கட்டளை பிறப்பித்து விட்டு அமர்ந்தான்.

நானும் அமர்ந்தேன். அந்தக் கவரை எடுத்து திருப்பித் திருப்பிப் பார்த்தேன். ஒரு தபால் கவரில் பாதி சைஸ் வெள்ளைக் கவர். உள்ளே ஏதோ மடிக்கப்பட்ட காகிதம் தெரிந்தது.

''இங்கே கொண்டா அதை'' என்றான் கோபி.

''எனக்குப் பயமா இருக்குடா. பிரிக்காதேன்னு சொன்னான்...''

''ஏண்டா இப்படி பயந்து சாகறே? இந்த சேட்டை கோபி இருக்கிற வரைக்கும் உன்னை யாரும் டச் பண்ண முடியாது. கவலைப்படாதே.''

நம்பி கவரை அவனிடம் கொடுத்தேன். அவன் எழுந்து ஆராய்ச்சிக் கூடத்திற்குள் சென்று ஒரு ஸ்பூனில் என்னவோ எடுத்து வந்தான். கவரில் பசை தடவி ஒட்டப்பட்டுள்ள இடத்தில் அந்த வெள்ளைத் திரவத்தைத் தடவினான். தன் சட்டை முனையில் எச்சில் தொட்டு அதன் மேல் தேய்த்தான்.

கவர் பொதபொதவென்று ஊறிப் போய்... அதை லேசாகக் கிழித்து விடாமல் பிரிக்க முயன்றபோது டர்ர் என்று குறுக்கில் கிழிந்து போய்... உள்ளே இருந்த காகிதம் தரையில் விழுந்தது.






உள்ளே இருந்த காகிதத்தில் கீழ்க் கண்டபடி எழுதியிருந்தது.

'பகலுக்கு எதிரி
கரப்பான் பூச்சி மீசைக்கு
ஆகாயத்தில் வரவு
கறுப்பு சேலை
குளிருதா கேள்,
தா- தருவாள்'

''அட! இது நம்ம நியூ கவிதை! இதைப் போயி எதுக்கு ராணுவ ரகசியம் மாதிரி பத்திரப்படுத்தி வச்சிருக்கான் அவன்?'' என்றேன்.

''நந்துப் பயலே, இதிலே ஏதோ முடிச்சி இருக்கு...''

''இதென்ன கயிறா? காகிதம்! எங்கே இருக்கு முடிச்சு?''

சேட்டை கோபி கைகளைப் பின்பக்கமாக கட்டிக் கொண்டான். அந்த அறையின் குறுக்கே நான்கைந்து முறை சிந்தனையாக நடந்தான். கட்டை விரலின் நகத்தை வெடுக் வெடுக்கென்று கடித்துத் துப்பினான். நகம் தீர்ந்ததும் நின்றான்.

அந்தக் காகிதத்தை மீண்டும் படித்தான். தன் ஆராய்ச்சிக் கூடத்திற்குள் சென்று ஒரு லென்ஸோடு திரும்பினான். அதைக் காகிதத்துக்கு மேல் பிடித்து பெரிது பெரிதாகப் படித்தான்.

''என்னடா செய்றே?''

''எனக்கு ஒண்ணு புரிஞ்சி போச்சி!''

''என்ன?''

''இது கவிதை இல்லை..இதிலே ரகசியச் செய்தி ஒளிஞ்சிருக்கு...''

''இதைத்தான் கண்டுபிடிச்சியா இவ்வளவு நேரமும்? உக்காரு. அந்தச் செய்தியில் முதல் வரிக்கு விடை கண்டுபிடிச்சிட்டேன் நான்...''

''என்ன, சொல்லு...''

''பகலுக்கு எதிரி யாரு?''

''எனக்கு பகலையே தெரியாது. பழக்கமில்லை. அந்தாளோட எதிரி யாருன்னு எப்படித் தெரியும்?''

''கோபி, பகல்ன்னா மனுஷன் இல்லை. பகல் நேரம். டைம். அதுக்கு எதிரி யாரு?''

''புதுசா கல்யாணம் பண்ணிக்கிட்ட எல்லாருக்குமே பகல் எதிரிதான்...''

''குழப்பாதேடா. பகலுக்கு எதிர்ப்பதம் இரவு.''

''ஆமாம். இரு. வர்றேன்'' என்று ஒரு நோட்டு எடுத்து கோபி இரவு என்று எழுதிக் கொண்டு, ''மேலே படி...''

'மின்சாரம் துணை' என்று அந்த நோட்டின் மேலே அவன் எழுதி இருந்ததைப் படித்தேன்.

''அதில்லைடா. நம்ம செய்தில அடுத்த வரி படி.''

''கரப்பான்பூச்சி மீசைக்கு...''

''அப்படின்னா என்ன அர்த்தம்? இரவில கரப்பான் பூச்சியைப் பிடிச்சி அதோட மீசையைப் பிய்க்கச் சொல்றானா?''

''இல்லை கோபி. கரப்பான்பூச்சிக்கு எத்தனை மீசை?''

''ரெண்டு.''

''அதோட க்கு சேரு...''

''க்கு ரெண்டு...''

''பின்பக்கம் சேரு...''

''ரெண்டுக்கு..!''

''எழுது நோட்டுல. இரவு ரெண்டுக்கு... எழுதினியா? ஆகாயத்தில் வரவு!''

''ஆகாயம் என்ன லெட்ஜர் வச்சிக்கிட்டு பற்று, வரவுன்னு கணக்கா எழுதுது? வரவாம். பூமியில் செலவு! கடலில் நஷ்டம்! மலையில் லாபம்! நல்லா எழுதறான்டா செய்தி!''

''கோபி, ஆகாயத்தில் வரவுன்னா கணக்கு விவகாரம் இல்லைடா. ஆகாயத்திலேருந்து யாரோ வர்றாங்கன்னு அர்த்தம்.''

''யாரு? தேவதைங்களா?''

''முட்டாள்! விமானத்திலே யாரோ வர்றாங்கடா! எழுது இரவு ரெண்டு மணிக்கு விமானத்தில் வருகிறார்கள். அடுத்து கறுப்பு சேலை''

''இது எனக்கே புரியுது நந்துப் பயலே. வர்ற நபர் பொம்பளை. அவ கறுப்பு சேலை கட்டியிருப்பா...''

''கரெக்ட். குளிருதா கேள். அதாவது அவகிட்டே போய் 'குளிருதா'ன்னு கேக்கணும்...''

''ஏண்டா, முன்னே பின்னே தெரியாத எவளோ ஒருத்தி கிட்டே போய் 'குளிருதா'ன்னு கேட்டா என்ன ஆகும்?''

''ஒண்ணும் ஆகாது. அது கோட் வார்த்தை...''

''அது கோட் வார்த்தையோ, டை வார்த்தையோ... நம்ம பண்பாட்டுக்கு ஒவ்வாத சமாச்சாரமா இருக்கு. அடுத்த வரி பாரு, இன்னும் ஆபாசமா இருக்கு. தா- தருவாள். முத்தம் கொடுக்கணுமாம். அவளும் திருப்பிக் கொடுப்பாளாம்.''

''கோபி, இது முத்த சமாச்சாரம் இல்லைடா. ஏதோ மொத்த சமாச்சாரம். இன்னைக்கு ராத்திரி ரெண்டு மணிக்கு விமானத்தில கறப்பு சேலைக்காரி ஒருத்தி வர்றா. அவளைப் பார்த்து குளிருதான்னு கேக்கணும். அப்புறம் அவ என்னவோ தருவா...''

''நாம என்னவோ தரணுமே... அதை மறந்துட்டியே... அது என்ன?''

''புரியலை. அது அங்கே யோசிக்கலாம். இதிலே நமக்கு ஏதோ பெரிய அதிர்ஷ்டம் இருக்கு. ஆனா ராத்திரி பன்னி ரெண்டு மணிக்கு அந்த முரட்டுப் பய வந்து இந்தக் கவரைக் கேப்பானே...''



''கவலையே படாதே...''

கோபி ஒரு காகிதத்தைப் பாதியாய்க் கிழித்து அதில் எழுதினான்.

'இரவுக்கு எதிரி
பசுவின் கால்களுக்கு
கடலில் வரவு
சிகப்புச் சேலை
வேர்க்குதா கேள்
தருவாள்-தா'

''இதோபார்... இதே மாதிரி கவர் தயாரிச்சி இந்த பொய்ச் செய்தியைப் போட்டு ஒட்டி வச்சிடலாம். அவன் வந்தா கொடுத்துடு. அப்புறம் நேரா ஏர்போர்ட் போய் கறுப்பு சேலைக்காரி தர்றதை வாங்கிக்கலாம்.''

''கோபி! நீ கில்லாடிடா!'' என்று அவன் கையைக் குலுக்கினேன். அவன் ''வலிக்கிறது'' என்றதும் விட்டேன்.




கடையைத் திறந்து வைத்துக் கொண்டு ராத்திரி நான் விழித்திருக்க... மாடியில் சேட்டை கோபி தெருப்பூரா கேட்குமளவு குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான்.

சரியாய் பன்னிரெண்டு மணிக்குச் சொன்ன சொல் தவறாத தசரதச் சக்கரவர்த்தி பைக்கில் வந்து இறங்கினான்- ஜீன்ஸ் பேண்ட்டில்.

''நந்தகுமார்... வெரிகுட். எனக்காகக் காத்திருக்கியே... கொண்டா அந்தக் கவரை!''

''தர்றேன். நீங்க அவ்வளவு பெரிய கத்தி காமிச்சிங்களே... அப்புறமும் தராம இருப்பேனா? ஆமாம். இந்தக் கவர்ல என்ன இருக்கு?''

அவன் தன் தாடியைச் சொறிந்து கொண்டான். ''அது உனக்குத் தேவை இல்லாத விஷயம். எடு. ஆமாம், மாவரைக்கிற சத்தம் கேக்குதே... எங்கே அரைக்கிறாங்க?''

''என் ஃபிரெண்டு குறட்டை விடறான். அதான். வேற ஒண்ணுமில்லை. பயப்படாதீங்க. மாடிலதான் அந்தக் கவரை வச்சிருக்கேன். உக்காருங்க. இதோ எடுத்துட்டு வர்றேன்...''

''பத்து எண்றதுக்குள்ளே வரணும்.''

''சரி, ஆனா நான்தான் எண்ணுவேன்...'' என்றேன்.

''சரி, சீக்கிரம்...''

''ஒண்ணு'' என்று விட்டு மாடிக்கு வந்தேன். சேட்டை கோபியைக் கன்னத்தில் தட்டி எழுப்பினேன். அவன் விழித்து திருதிரு என்று விழித்து, ''எங்கேடா கறுப்பு சேலை?''

''கரப்பான்பூச்சி மீசைக்கு...''

''அப்படின்னா என்ன அர்த்தம்? இரவில கரப்பான் பூச்சியைப் பிடிச்சி அதோட மீசையைப் பிய்க்கச் சொல்றானா?''

''இல்லை கோபி. கரப்பான்பூச்சிக்கு எத்தனை மீசை?''

''ரெண்டு.''

''அதோட க்கு சேரு...''

''க்கு ரெண்டு...''

''பின்பக்கம் சேரு...''

''ரெண்டுக்கு..!''

''எழுது நோட்டுல. இரவு ரெண்டுக்கு... எழுதினியா? ஆகாயத்தில் வரவு!''

''ஆகாயம் என்ன லெட்ஜர் வச்சிக்கிட்டு பற்று, வரவுன்னு கணக்கா எழுதுது? வரவாம். பூமியில் செலவு! கடலில் நஷ்டம்! மலையில் லாபம்! நல்லா எழுதறான்டா செய்தி!''

''கோபி, ஆகாயத்தில் வரவுன்னா கணக்கு விவகாரம் இல்லைடா. ஆகாயத்திலேருந்து யாரோ வர்றாங்கன்னு அர்த்தம்.''

''யாரு? தேவதைங்களா?''

''முட்டாள்! விமானத்திலே யாரோ வர்றாங்கடா! எழுது இரவு ரெண்டு மணிக்கு விமானத்தில் வருகிறார்கள். அடுத்து கறுப்பு சேலை''

''இது எனக்கே புரியுது நந்துப் பயலே. வர்ற நபர் பொம்பளை. அவ கறுப்பு சேலை கட்டியிருப்பா...''

''கரெக்ட். குளிருதா கேள். அதாவது அவகிட்டே போய் 'குளிருதா'ன்னு கேக்கணும்...''

''ஏண்டா, முன்னே பின்னே தெரியாத எவளோ ஒருத்தி கிட்டே போய் 'குளிருதா'ன்னு கேட்டா என்ன ஆகும்?''

''ஒண்ணும் ஆகாது. அது கோட் வார்த்தை...''

''அது கோட் வார்த்தையோ, டை வார்த்தையோ... நம்ம பண்பாட்டுக்கு ஒவ்வாத சமாச்சாரமா இருக்கு. அடுத்த வரி பாரு, இன்னும் ஆபாசமா இருக்கு. தா- தருவாள். முத்தம் கொடுக்கணுமாம். அவளும் திருப்பிக் கொடுப்பாளாம்.''

''கோபி, இது முத்த சமாச்சாரம் இல்லைடா. ஏதோ மொத்த சமாச்சாரம். இன்னைக்கு ராத்திரி ரெண்டு மணிக்கு விமானத்தில கறப்பு சேலைக்காரி ஒருத்தி வர்றா. அவளைப் பார்த்து குளிருதான்னு கேக்கணும். அப்புறம் அவ என்னவோ தருவா...''

''நாம என்னவோ தரணுமே... அதை மறந்துட்டியே... அது என்ன?''

''புரியலை. அது அங்கே யோசிக்கலாம். இதிலே நமக்கு ஏதோ பெரிய அதிர்ஷ்டம் இருக்கு. ஆனா ராத்திரி பன்னி ரெண்டு மணிக்கு அந்த முரட்டுப் பய வந்து இந்தக் கவரைக் கேப்பானே...''



''கவலையே படாதே...''

கோபி ஒரு காகிதத்தைப் பாதியாய்க் கிழித்து அதில் எழுதினான்.

'இரவுக்கு எதிரி
பசுவின் கால்களுக்கு
கடலில் வரவு
சிகப்புச் சேலை
வேர்க்குதா கேள்
தருவாள்-தா'

''இதோபார்... இதே மாதிரி கவர் தயாரிச்சி இந்த பொய்ச் செய்தியைப் போட்டு ஒட்டி வச்சிடலாம். அவன் வந்தா கொடுத்துடு. அப்புறம் நேரா ஏர்போர்ட் போய் கறுப்பு சேலைக்காரி தர்றதை வாங்கிக்கலாம்.''

''கோபி! நீ கில்லாடிடா!'' என்று அவன் கையைக் குலுக்கினேன். அவன் ''வலிக்கிறது'' என்றதும் விட்டேன்.




கடையைத் திறந்து வைத்துக் கொண்டு ராத்திரி நான் விழித்திருக்க... மாடியில் சேட்டை கோபி தெருப்பூரா கேட்குமளவு குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான்.

சரியாய் பன்னிரெண்டு மணிக்குச் சொன்ன சொல் தவறாத தசரதச் சக்கர வர்த்தி பைக்கில் வந்து இறங்கினான்- ஜீன்ஸ் பேண்ட்டில்.

''நந்தகுமார்... வெரிகுட். எனக்காகக் காத்திருக்கியே... கொண்டா அந்தக் கவரை!''

''தர்றேன். நீங்க அவ்வளவு பெரிய கத்தி காமிச்சிங்களே... அப்புறமும் தராம இருப்பேனா? ஆமாம். இந்தக் கவர்ல என்ன இருக்கு?''

அவன் தன் தாடியைச் சொறிந்து கொண்டான். ''அது உனக்குத் தேவை இல்லாத விஷயம். எடு. ஆமாம், மாவரைக்கிற சத்தம் கேக்குதே... எங்கே அரைக்கிறாங்க?''

''என் ஃப்ரெண்டு குறட்டை விடறான். அதான். வேற ஒண்ணுமில்லை. பயப்படாதீங்க. மாடிலதான் அந்தக் கவரை வச்சிருக்கேன். உக்காருங்க. இதோ எடுத்துட்டு வர்றேன்...''

''பத்து எண்றதுக்குள்ளே வரணும்.''

''சரி, ஆனா நான்தான் எண்ணுவேன்...'' என்றேன்.

''சரி, சீக்கிரம்...''

''ஒண்ணு'' என்று விட்டு மாடிக்கு வந்தேன். சேட்டை கோபியைக் கன்னத்தில் தட்டி எழுப்பினேன். அவன் விழித்து திருதிரு என்று விழித்து, ''எங்கேடா கறுப்பு சேலை?''

''ஷ்! சத்தம் போடாதே! தாடிக்காரன் வந்திருக்கான். நீ செட்டப் செஞ்ச கவரைத் தரப் போறேன். கவர் மாறினதைக் கண்டுபிடிச்சுடுவானா?''

''அவன் கண்டுபிடிக்காம இருக்கிறதுக்கு நான் ஒரு ஐடியா பண்றேன்...''

''என்ன?''

''இந்தக் கடைக்கும், மாடிக்கும் மெயின் சுவிட்ச் இங்கே தான் இருக்கு. நீ கீழே போனதும் நான் அதை அணைச்சிடறேன். நீ இருட்டிலே வச்சிக் கொடுத்துடு. தடவிப் பார்த்துக் கண்டுபிடிக்க முடியாது...''

''பெரிய ஆள்டா நீ!'' என்றுவிட்டு நான் கீழே இறங்கி வந்து, ''ஏழு... எட்டு...'' என்றேன்.

''எனக்கு நேரமாச்சி. எடு சீக்கிரம்...''

நான் பாண்ட் பாக்கெட்டுக்குள் கை விட்டு விளக்கு அணைவதற்காகக் காத்திருந்தேன்.

''என்னய்யா செய்றே?''

''எடுக்க வரல்லை. பாக்கெட்ல சிக்கிக்கிச்சி.''

படுபாவி! இன்னும் சுவிட்ச்சை அணைக்காமல் இருக்கிறானே...

''நீ கையை எடு. நான் எடுத்துக்கறேன் உன் பாக்கெட்லேர்ந்து'' என்றான் தாடி.

''ச்சீ! எனக்குக் கூச்சமா இருக்கும்...''

இப்போதுதான் விளக்குகள் அணைந்தன.

''இந்தாங்க நீங்க கொடுத்த கவர்'' என்று அவனைத் தடவி அவன் கையில் வைத்தேன்.

''பிரிச்சியா?''

''சேச்சே... எவ்வளவு ஸ்ட்ராங்கா ஒட்டியிருக்கு. முடியற காரியமா அது?''

''அப்ப முயற்சி செஞ்சியா?''

''அதுகூடத் தப்பா?''

''சரி, நான் வர்றேன்...''

''ஒரு நிமிஷம். தாடி பிரதர், தாடி பிரதர்... காலைலேர்ந்து இதைப் பத்திரமா வச்சிருந்தேனே, எனக்குப் பரிசு எதுவும் தரமாட்டியா?''

''சரி, என்ன வேணும் கேளு...''

''நான் என்ன ஆயிரம் பொற்காசுகளா கேக்கப் போறேன். காலைல நீ காட்டின கத்தி அழகா இருந்திச்சி. கொடுத்தா பழம் நறுக்கிச் சாப்பிடுவேன். உன் ஞாபகார்த்தமா வச்சிக்குவேன்...''

''சரியான அல்பனா இருப்பே போலிருக்கே...''

''இதெல்லாம் வழி வழி மூதாதையர் கிட்டேர்ந்து வர்ற குணம்ங்க...''

''சரி, தர்றேன்.''

இருட்டிலேயே அவன் தன் ஷூவை அவிழ்க்கிற ஓசை



கேட்டது.

''அவசரமா தேவைன்னா எப்படி எடுப்பே?''

''அவசரத்துக்குத் துப்பாக்கி வச்சிருக்கேன்.''

இப்போது மாடியில் இருந்து, ''அவன் போய்ட்டானா? சுவிட்சு போடலாமா?'' என்று கோபி கேட்டான்.

''யார் அது? என்ன கேக்கறான் அவன்?''

''என் ஃபிரெண்டு தூக்கத்திலே பேசிக்குவான்...''

''இந்தா கத்தி...''

நான் இருளில் தடவி வாங்கிக் கொண்டு, ''ஆ!'' என்றேன்.

''ஸாரி, கத்தியை விரிச்சிக் கொடுத்துட்டேன். மடக்கிக்க. வரட்டுமா? நீ செஞ்ச உதவிக்கு ரொம்ப தேங்ஸ்''

அவன் பைக்கில் புறப்பட்டுப் போனதும், நான் குரல் கொடுத்தேன். கோபி மெயின் சுவிட்ச் போட்டு விட்டுக் கீழே வந்தான்.

''அறிவு இருக்கா உனக்கு? அவன் இருக்கிறப்பவே கேக்கறியே..''

''அவன் போய்ட்டான்னு நினைச்சேன். இது என்னடா கத்தி? மறந்துட்டுப் போய்ட்டானா?''

''இல்லை. எனக்கு நினைவுப் பரிசா கொடுத்துட்டான்...''

''சரி, சீக்கிரம் புறப்படு. ஏர்போர்ட் போகணும்...''

இருவரும் அந்த அர்த்த ராத்திரியில் முகம் கழுவி உடை மாற்றி, சென்ட் எல்லாம் போட்டுக் கொண்டு, அந்த ரகசிய செய்திக் கவிதையைப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு பஞ்ச கல்யாணியில் புறப்பட்டோம்.

மீனம்பாக்கம் விமான் நிலையத்திற்கு அந்த இரவில் ஒன்றே கால் மணிக்கு வந்து சேர்ந்த நாங்கள் காத்திருந்தோம். கூட்டம் குறைவாக இருந்தது.

''நந்துப் பயலே, போலீஸ் ரோந்து வருது. கவனிச்சியா?''

''ஆமாம். எனக்குப் பயமா இருக்கு. நாம போலின்னு அவ கண்டுபிடிச்சுட்டா என்ன செய்றது?''

''சும்மா உளறாதேடா. வாழ்க்கைல ஒரு சாகசம் வேணும். எல்லாப் பொறுப்பையும் என்கிட்டே கொடு. நீ என் பக்கத்திலே நின்னு கவனி. போதும்...''

''அதுசரி, நீ என்ன தரப் போறே அவளுக்கு?''

''முதல்ல வரட்டும்.''

சேட்டை கோபி என்னை உட்கார வைத்துவிட்டு உலாத்தினான். ஸ்டைலாக சிகரெட் கொளுத்திக் கொண்டான். சக்கரம் பொருத்தின பெரிய சூட்கேசுடன் நின்ற ஒரு ஆசாமியிடம் என்னமோ பேசிவிட்டு வந்தான். நான் உற்சாகமாக உட்கார்ந்திருந்தேன்.

சரியாய் இரண்டு மணிக்கு ஒரு விமானம் ரன்வேயில் இறங்கி கட்டிடத்தை நோக்கி ஓடி வந்தது. பம்பாயில் இருந்து வந்த விமானம் என்று அறிவித்தார்கள். சேட்டை

கோபி எச்சில் தொட்டுத் தன் புருவங்களைத் தீட்டிக் கொண்டான். புதிய சிகரெட்டை என்னிடம் கொடுத்தான. எடுத்து வந்திருந்த கூலிங் கிளாஸை அந்த நேரத்திற்கு அபத்தமாய் அணிந்து கொண்டான். காத்திருந்தோம்.

விமானத்தைத் திறந்து கொண்டு இறங்கின கும்பல் கதவை நோக்கி வர... ஆ! அதோ, கறுப்பு சேலை, கையில் சிறிய பெட்டியோடு வந்தாள்.

வெளியே வந்ததும்...

சேட்டை கோபி அவளிடம் நேராய்ச் சென்றான்.

''ஹலோ, ரொம்பக் குளிருதா?'' என்று சிரித்தான்.

''என்ன?'' என்றாள்.

''குளிருதான்னு கேட்டேன்...''

''இடியட்!'' என்று அவன் கன்னத்தில் அறைந்தாள். வேகமாகப் போய் விட்டாள்.

''நீ ஏண்டா எடுத்ததும் ரொம்பக் குளிருதான்னு கேட்டே. அதான் தப்பாப் போச்சி!''

''ஆள் மாறிடுச்சின்னு நினைக்கிறேன்...''

''அதோ பாரு, இன்னொரு கறுப்புச் சேலை...''

''இந்தத் தடவை நீ கேளு நந்து'' என்றான்.

இந்தக் கறுப்புச் சேலை மிக இளமையாக இருந்தாள். ஒரே ஒரு கைப்பை மட்டுமே வைத்திருந்தாள். அவள் வெளியே வரக் காத்திருந்து, நான் ஜாக்கிரதையாக அவள் கை வீச்சுக்கு எட்டாத தூரத்தில் நின்று கொண்டு, ''குளிருதா?'' என்றேன்.

அவள் புன்னகைத்தாள். ''ஆமாம்...'' என்றாள்.

அடுத்து இரண்டு பேரும் அமைதியாய் நின்றோம். சற்று தூரத்தில் எங்களைக் கவனித்துக் கொண்டு சேட்டை கோபி நின்றான்.

''சீக்கிரம் தாங்க...'' என்றாள்.

எனக்கு வெட்கமாக இருந்தது.

''இங்கேயா? இந்த இடத்திலேயேவா?'' என்றேன்.

அப்போது ஒரு போலீஸ்காரர் எங்களையே பார்த்துக் கொண்டு போனார். அவரைப் பார்த்த அவள், ''இங்கே எதுக்குத் தயங்கறிங்கன்னு புரியுது. நான் தங்கியிருக்கிற ஹோட்டல்ல வச்சி தர்றிங்களா?'' என்றாள்.

''எத்தனை வேணாலும் தர்றேன்...''

அவள் ஒரு மாதிரியாய்ப் பார்த்து, ''வாங்க'' என்று டாக்ஸியை நோக்கி நடந்தாள்.

''மேடம்... என் ஃப்ரெண்டும் தாணும்னு ஆசைப் படறான். அவனையும் அழைச்சுக்கலாமா?''

''நீங்க பேசறது எனக்குப் புரியலையே... ரெண்டு மூணு தொகையா பிரிச்சுட்டாங்களா?''

''எனக்கும்தான் புரியலை. எதுவும் இங்கே பேச வேணாம்...''



''சரி, அவரையும் கூட்டிக்கலாம்...''

''உங்களுக்கு தாராள மனசு. பேரென்ன?''

''ரீட்டா!''

''ரிவால்வர் வச்சிருக்கீங்களா?''

''எப்படிக் கண்டுபிடிச்சிங்க? மார்வலெஸ்!''

நான் சிரித்தேன் வெறுமையாக. 'ரிவால்வர் ரீட்டா' என்று வார்த்தைத் தொடர் நினைவுக்கு வரக் கேட்டு வைத்ததுதான். அதற்கு ஒரு பாராட்டா?

''என் கிட்டேர்ந்து யாரும் எதையும் மறைக்க முடியாது. வாங்க போலாம்'' என்று கோபிக்கு சைகை காட்டினேன்.

வந்தான். ''கோபி, நீ எங்க டாக்ஸியை ஃபாலோ செய்'' என்றேன். முறைத்தான். அதை அலட்சியப்படுத்தி அவள் பிடித்த டாக்ஸியில் நாங்கள் இருவரும் அருகருகே அமர்ந் தோம். டாக்ஸி புறப்பட்டது. பஞ்சகல்யாணியில் கோபி கோபமாகத் தொடர்ந்து வந்தான்.

''தலைவர் நல்லா இருக்காரா?'' என்றாள் கிசுகிசுப்பாக.

''நீங்க மெட்ராஸ் வந்து ரொம்ப நாளாச்சி போலிருக்கு. தலைவர் இறந்து போய் கட்சி ரெண்டாய்ப் பிரிஞ்சி, புதுசு புதுசா ஊழல் சமாச்சாரம் எல்லாம் வந்துக்கிட்டிருக்கே...''

''நீங்க ரொம்ப சாமர்த்தியசாலிதான். டாக்ஸியில நம்ம தலைவரைப் பத்திப் பேசறது தப்புங்கிறதுக்காக அரு மையாப் பேச்சை மாத்தறிங்க. சரிதானே?''

நம்ம தலைவரா? என்ன சொல்கிறாள் இவள்?

''ஆமாம்'' என்று சொல்லி வைத்தேன்.

''கொண்டு வந்திருக்கியான்னு கேக்கவே இல்லையே நீங்க?'' என்றாள்.

எதை..?

''நீங்க கொண்டு வந்திருப்பிங்கங்கறதிலே எனக்குச் சந்தேகமே இல்லை. அதனால கேக்கலை.''

''நீங்களும் கொண்டு வந்திருக்கீங்க. இல்லையா?''

''ம். நிறையவே கொண்டாந்திருக்கேன்.''

''நிறையவா?'' என்று அவள் சந்தேகமாகப் பார்த்தாள்.

''இது மாதிரி டாக்ஸில பேசறது நம்ம தலைவருக்குப் பிடிக்காது. ஹோட்டல்ல போய் பேசிக்கலாம். ஆமாம், எந்த ஹோட்டல்?''

''அடையாறு கேட்'' என்றாள்.

ஹோட்டல் வந்தோம். டாக்ஸியை அனுப்பினோம். கோபி வண்டியைப் பார்த்துவிட்டு செக்யூரிட்டி ஆசாமி அந்த வண்டியை உள்ளே அனுமதிக்க முடியாது என்று விட்டான். ஏன் என்பதற்கு ஹோட்டலின் அழகு பாதிக்கும் என்றான். பிறகு வண்டியை ஹோட்டலுக்கு வெளியில் சாலையில் நிறுத்தி விட்டு வந்தான்.

ரீட்டாவின் பெயரில் ஏற்கெனவே அறை பதிவு செய்யப் பட்டிருந்தது. அந்த விசாலமான, வசதியான அறைக்கு

வந்தோம். மூவரும் அமர்ந்தோம். "சீக்கிரம் கொடுங்க" என்றாள் ரீட்டா.

"இவன் இங்கே இருந்தா பரவாயில்லையா?" என்றேன்.

"இருக்கட்டும். உங்க ஃபிரெண்டுதானே?"

"இருந்தாலும் உங்களுக்குக் கூச்சமா இருக்காதா?"

"இதிலே என்ன கூச்சம்?"

"அப்ப சரி, எதுக்கும் நீங்க முதல்ல கொடுத்துடுங்களேன்..."

"நீங்க கொடுத்ததும் கொடுக்கச் சொல்லிதான் உத்தரவு."

"யார் ஆரம்பிச்சா என்ன? சரி, கண்ணை மூடிக்குங்க..."

"கொஞ்சம் வினோதமா நடந்துக்கறிங்க ஆரம்பத்திலேர்ந்தே. சரி, இதோ கண்ணை மூடிக்கிட்டேன். என் கைல கொடுங்க..."

"கைலதானா? அப்ப, கோபி, நீயே கொடுடா..."

கோபி உதடுகளை நனைத்துக் கொண்டு வந்து அவள் கையைப் பிடித்து மென்மையாக முத்தமிட... அவள் கையை உதறிக் கொண்டு ஆத்திரமானாள்.

"என்ன இது? நான்சென்ஸ்! சீக்கிரம் டீலிங்கை முடிச்சிக்கிட்டுப் போங்க!"

நான் பரிதாபமாக சேட்டை கோபியைப் பார்க்க, அவன் அறிவு திடீரென்று பிரகாசமாகி சுதாரிப்பாய்ப் பேச ஆரம் பித்தான்.

"இதோபாருங்க ரீட்டா. எங்க பாசுக்கு உங்க மேல நம்பிக்கை இல்லை. அதனால சமாச்சாரத்தை வாங்கிக்கிட்டு அப்புறம்தான் கொடுக்கச் சொன்னார்..."

"பாஸா? தலைவர்ன்னுதானே சொல்றது பழக்கம்?"

"இவன் இப்பதானே புதுசா சேர்ந்திருக்கான். இவனுக்கு. இனிமேத்தான் பழகணும்" என்றேன் நான்.

"ஓக்கே" என்று தன் கைப்பையைத் திறந்து ஒரு சின்ன விவேகானந்தர் மண் பொம்மையை எடுத்துத் தந்தாள். "செக் கொடுங்க..."

"செஸ் விளையாட்டா விளையாடறோம், செக் கொடுக்கிறதுக்கு?"

"இவர் யாரு? ராமலிங்க அடிகளாரா?" என்று பொம்மையை ஆராய்ந்தான் கோபி.

"விளையாடாதீங்க. பத்து லட்சத்துக்கான செக் கொண்டு வரல்லையா?"

"பத்து லட்சமா? இந்த மண்ணு பொம்மைக்கா? எந்த ஊர் நியாயம் இது?"

"மண் பொம்மையா? இதோட மதிப்பு தலைவருக்குத்தான் தெரியும். இதை வச்சி அவர் கோடிக் கணக்கிலே சமபாதிக்கப் போறாரே... நேரமாச்சி, எடுங்க செக்கை..."

என் பாக்கெட்டுக்குள் கை விட்டுப் பார்த்து, "அடடா!" என்றேன். "செக் எடுத்துட்டு வந்தோம். ஒரு கவர்ல



போட்டு, கவரை பைக்கோட பெட்டிக்குள்ளே வச்சிருக்கோம். பைக் ஹோட்டலுக்கு வெளில நிக்கிது. போய் எடுத்துக்கிட்டு வந்துடறோம். வா கோபி" என்றேன் அவசரமாக.

"நான் இங்கேயே இருக்கேன். நீ போய் எடுத்துக்கிட்டு வந்துடு சீக்கிரமா..." என்றான் கோபி சமயம் புரியாமல் அந்தப் பொம்மையை ஆராய்ந்து கொண்டு.

"கோபி, வாடான்னா..." என்றேன் அழுத்தமாக.

"ஆமாம். நானும் போய்ட்டு வந்துடறேன். எண்ணெய் ஆட்ற செக் இல்லையா? கொஞ்சம் வெய்ட்டா இருக்கும். ரெண்டு பேர் சேர்ந்துதான் தூக்கிட்டு வர முடியும்" என்று கோபி புறப்பட... "ரெண்டு பேரும் நகராதீங்க. நகர்ந்தா சுட்டுடுவேன்" என்றாள் அவள்.

"நெருப்பாலியா?" என்றான் கோபி.

"துப்பாக்கியால. திரும்பிப் பாருங்க..."

"நகர்ந்தா சுடுவே. திரும்பிப் பார்க்கவும் சொல்றே. நகராம எப்படித் திரும்பிப் பார்க்கிறது?" என்ற கோபி திரும்பி கார்ப்பெட்டில் கால் இடறி... மரம் போல ரீட்டா மேல் சாய... அவளின் துப்பாக்கி நழுவிப் போய் விழுந்தது. நான் ஓடிப்போய் அதை எடுத்துக் கொண்டேன்.

"டேய்! என்னைச் சுட்டுடாதே!" என்றான் கோபி.

"உன்னை ஏண்டா சுடப் போறேன்? நீ வா இந்தப் பக்கம். ரீட்டா, நீட்டா பாத்ரூமுக்குள்ளே போ" என்றேன்.

"எதெதுக்குத்தான் வற்புறுத்தறதுன்னு இல்லையா நந்துப்பயலே..."

"நீ சும்மா இரு" என்று துப்பாக்கி முனையில் அவளை பாத்ரூமுக்குள் அனுப்பி, கதவைப் பூட்டிவிட்டு, "வா சீக்கிரம்" என்று இழுத்துக் கொண்டு ஹோட்டலுக்கு வெளியே ஓடி வந்தேன்.

"அய்யய்யோ! அந்தப் பொம்மையை ரூம்லேயே வச்சிட்டேன்..."

"ஓடுடா, போய் அதை எடுத்துக்கிட்டு வா. அதில என்னவோ இருக்கு..."

கோபி மூன்றே நிமிடங்களில் பொம்மையுடன் திரும்ப... பஞ்ச கல்யாணியைத் தட்டிக் கொடுத்து விர்ரென்று எங்கள் இடத்திற்கு வந்தோம் விரைவாக.




சேட்டை கோபி அந்த விவேகானந்தர் பொம்மையை பல வகையான சித்திர வதைகளுக்கு உள்ளாக்கினான். திருப்பித் திருப்பிப் பார்த்தான். பெயிண்டைச் சுரண்டிப் பார்த்தான். கண்களை நோண்டிப் பார்த்தான். எங்கேயாவது ரகசிய ஓட்டை இருக்கிறதா என்று ஒற்றைக்

கண்ணை மூடிக் கொண்டு லென்ஸ் வைத்துத் தேடினான். தேங்காய் வாங்குபவன் போல ஆட்டிப் பார்த்தான். ஒவ்வொரு பாகமாக தட்டிப் பார்த்தான். வெறுத்துப் போனான்.

''நந்துப் பயலே, இதிலே ஒண்ணும் இல்லைடா. வெறும் மண் பொம்மைதான். நாம அவளை ஏமாத்தின மாதிரி அவளும் நம்மை ஏமாத்திட்டா.''

''இதுக்கு ஏண்டா பத்து லட்சம் தரணும்? இதை வச்சி கோடி கோடியா சம்பாரிக்கிறது எப்படி? நம்ம தலைவர்ன்னா யாரு?''

''அந்த தாடிக்காரனோட தலைவர்தான் அவ சொல்ற தலைவர். பம்பாய்லேர்ந்து வர்றா. பொம்மை தர்றா. இங்கே என்னடான்னா கவருக்குள்ளே புதுக்கவிதை ஸ்டைல்ல ரகசிய செய்தி. அப்படி என்ன மர்மம் நடக்குது? இதை நாம துப்புத் துலக்கியே ஆகணும்...''

''பல்லே நான் சரியாத் துலக்க மாட்டேன். எங்கேர்ந்து துப்புத் துலக்கறது? பாத்ரூமுக்குள்ளே மாட்டிக்கிட்ட ரீட்டா இப்போ கதவைத் தட்டி, கத்தி வெளில வந்திருப்பா. தான் சோரம் போய்ட்டதா தலைவர்கிட்டே சொல்வா. ஸாரி, மோசம் போய்ட்டதாச் சொல்வா. தாடி அண்ணன் நாம கொடுத்த டூப்ளிகேட் கவரைக் கண்டுபிடிச்சிருப்பார். இப்போ முதல் காரியமா நாம ரெண்டு பேரும் தலை மறைவாகிடணும்...''

''தலை மட்டும் மறைவாகிட்டாப் போதுமா? உடல் காட்டிக் கொடுத்துடாதா? மொத்தமா மறைவாகிடணும். சின்ன சாவித்ரின்னு எனக்கு ஒரு பொண்ணைத் தெரியும். அவளுக்கு என் மேல ஒரு தனி பிரியம். அவ வீட்டுக்குப் போய்டலாமா?''

''அதென்ன சின்ன சாவித்ரி?''

''ரெட்டைப் புள்ளைங்க. ரெண்டு பேருக்குமே சாவித்ரின்னு பேர் வச்சிட்டாங்களாம். அஞ்சி நிமிஷம் முன்னாடி பொறந்தவ பெரிய சாவித்ரி. பின்னாடி பொறந்தவ சின்ன சாவித்ரி! பெரிய சாவித்ரி கல்யாணமாகிப் போய்ட்டா. அவ புருஷன் பேரு சின்ன ராசப்பன். ஏன் அப்படிப் பேருன்னா...''

''தெரியும். சொல்ல வேணாம். கதை பேசற நேரமா இது? வா, போகலாம்...''

''இந்த பொம்மையை எடுத்துக்கிட்டே போகலாமா?'' என்று சேட்டை கோபி அவசரமாக அதை எடுக்க... பொம்மை கை தவறித் தரையில் விழுந்து இரண்டாக உடைந்தது. உள்ளே ஒரு இரும்புத் தாயத்து போல ஒரு மூன்று இன்ச் நீளத்தில், பென்சில் கனத்தில் ஒன்று உருண்டு உருண்டு ஓடியது.

அதை எடுத்தான். இரண்டு வாய்ப்புறங்களும் ஈயத்தால் பற்ற வைக்கப்பட்டிருந்தது. உடனே ஆராய்ச்சிக் கூடத்திற்கு ஓடி, ஸ்டவ்வைப் பற்ற வைத்தான். ஒரு கிடுக்கியில் அந்த இரும்பு தாயத்து சமாச்சாரத்தைப் பிடித்து ஒரு முனையில் இருந்த ஈயத்தை உருக வைத்தான். பிறகு அதைத் தொட்டு, ''ஆ!'' என்று அலறினான்.



''சுடும்னுகூடத் தெரியாதா? என்ன விஞ்ஞானிடா நீ? துணியை வச்சிப் பிடி. இல்லைன்னா தண்ணில போட்டு எடு'' என்றேன்.

நீரில் நனைத்து எடுத்து, ஒரு முனையின் சின்ன மூடியை நெம்பித் திறந்து, உள்ளே இருப்பதை உள்ளங்கையில் கொட்ட... ஒரு நெருக்கமாகச் சுருட்டப்பட்ட திக்கான காகிதத்தின் சுருள் இருந்தது.

அதை விரிக்க வால் மாதிரி ஒரு அடி நீளத்திற்கு வந்தது.

ஒரு எழவும் புரியாமல் வரிசை வரிசையாய் ஒரே கூட்டல் குறிகளும், கழித்தல் குறிகளும், ஆங்கில எழுத்துக்களும், எண்களுமாக - எம்.எஸ்சி கெமிஸ்ட்ரி புத்தகத்தைப் புரட்டியத போல இருந்தது.

சாம்பிளுக்குக் கொஞ்சம்

ZAO7+BPL2=RIP5-MLA8

DH4-LE2+SJ9+N3K=WLT62

கடைசி வரியில் 'இதுதான் ஃபார்முலா' என்று ஆங்கிலத்தில் இருந்தது. அது ஒரு வரி மட்டும் புரிந்தது.

''கோபி, இது என்னமோ தயாரிக்கிறதுக்கான ஃபார்முலாடா''

''நம்மளை மாதிரி ஒரு சக விஞ்ஞானி எழுதிருக்கானா? புரியற மாதிரி எழுதக் கூடாதோ? என்ன ஆராய்ச்சியா இருக்கும்?''

கோபி கேட்டுக் கொண்டிருக்கும் போதே எங்கள் கட்டிட வாசலில் இரண்டு மோட்டார் பைக்குகள் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. நான் மாடியில் இருந்த ஜன்னல் வழியாக லேசாகப் பார்த்தேன்.

''போச்சுடா! தாடிக்காரன் இன்னும் ரெண்டு பேரை அழைச்சிக்கிட்டு வந்திருக்கான்.''

''கவலைப்படாதே. இங்கேர்ந்து நம்ம மொட்டை மாடிக்குப் போய்... அங்கேர்ந்து தாவித் தாவி சின்ன சாவித்ரி வீட்டு மொட்டை மாடிக்குப் போய்டலாம். பக்கம்தான். ஃபாலோ மி. இந்தா, ஃபார்முலாவைப் பத்திரமா வச்சிக்கோ...''

அவனிடமிருந்து வாங்கி நான் விரல்களை விடுவித்ததும் அது சொய்ய் என்று பாயாய் சுருண்டு கொண்டது. பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டு அவனைத் தொடர்ந்தேன்.

இரண்டு பேரும் மொட்டை மாடிக்கு வந்தபோது எங்கள் கடையின் கதவை தொம், தொம் என்று தட்டும் சத்தம் கேட்டது.

''அவங்க தட்டிக்கிட்டே இருக்கட்டும். என்னை மாதிரி நீயும் பேண்டைக் கழட்டிக் கையில் சுருட்டிக்கோ'' என்றான்.

''ச்சீ! என்னடா இதெல்லாம்? சட்டையும் ஜட்டியுமா நிக்கிறே?''

''மண்டு! சீக்கிரம் கழட்டுடா. பேண்ட்டோட தாவ முடி யாது. பேண்ட் கிழிஞ்சிடும். ராத்திரி நேரம். யார் பார்க்குறா நிலாவைத் தவிர? சீக்கிரம். அவங்க வந்துடுவாங்க...''

நான் வேறு வழியில்லாமல் பேண்ட்டைக் கழற்றி சுருட்டிக் கொண்டேன். போன ஜென்மப் பழக்கத்தில் கோபி பிரமாதமாய் ஒரு மாடிக்கும் இன்னொரு மாடிக்கும் தாவ ஆரம்பித்தான். நடுநடுவே 'ஃபாலோ மி' என்று சொல்லிக் கொண்டான்.

திருடர்களைப் போல நாங்கள் தாவித் தாவி தொலை தூரம் வந்து விட்டோம். கிட்டத்தட்ட நூறு மொட்டை மாடிகளைத் தாண்டியிருப்போம்.

''என்னடா, இன்னும் எவ்வளவு தூரம்?''

''மொட்டை மாடி ரூட்ல அடிக்கடி வந்திருக்கேன். இதே மாதிரி தாவித் தாவி வந்து சின்ன சாவித்ரி கிட்டே பேசிட்டு திரும்பிப் போயிடுவேன்.''

''விடிஞ்சுடுமே...''

''அதெல்லாம் பி.டி.உஷாவை விட வேகமாத் தாண்டு வேன். ஒரு தடவை தாண்டி வந்தப்போ... என்னாச்சி, ஏன் நின்னுட்டே? வா, தாவிக்கிட்டே பேசலாம்...''

இருவரும் தாவலைத் தொடர்ந்து கொண்டே ரக சியமாகப் பேசினோம்.

''என்னமோ சொல்ல வந்தியே... என்ன?''

''ஒரு மொட்டை மாடில காத்துக்காக கட்டில் போட்டுக் கிட்டு ஒரு ஆளு படுத்திருந்தான். நான் அவன் மொட்டை மாடில குதிச்சதும் 'திருடன் திருடன்'னு கத்த ஆரம்பிச் சிட்டான்...''

''அய்யய்யோ! அப்புறம் என்னாச்சி?''

''நான் வேகமா அவன் வாயைப் பொத்திட்டு, 'திருடன் இல்லை, திருடன் இல்லை. சும்மா கனவுல கத்திட்டேன். யாரும் வரவேணாம்'னு கத்தினேன். யாரும் வரலை. நான் ஒவ்வொரு மொட்டை மாடிலயும் கிடந்த கூழாங்கல் லெல்லாம் பொறுக்கிக்கிட்டே வந்திருந்தேனா... ஒரு கை நிறைய அள்ளி அவன் வாயில் திணிச்சி, மேலே கர்சிப் போட்டுக் கட்டி... அவன் லுங்கியை அவுத்து அதால அவன் கையைக் கட்டிட்டு... நான் தாவித் தாவி ஓடிட்டேன்...''

''ஆனாலும் அற்புதமாத் தாவறேடா கோபி. உன்கிட்டே எம்.எல்.ஏ.ல்லாம் பிச்சை எடுக்கணும்!''

''அந்த ஒரு சம்பவத்தைத் தவிர வேற எந்தப் பிரச் சனையும் இதுவரைக்கும் நான் சந்திக்கலை'' என்ற கோபி அந்த சற்றுப் பணக்காரத்தனமாய் இருந்த மொட்டை



மாடியில் தாவலை நிறுத்தி நின்றான். அந்த மொட்டை மாடியில் வரிசையாக மண் தொட்டிகளில் பூக்கள் இருந்தன.

''இது யாரு வீட்டு மொட்டை மாடி தெரியுமா?''

''யாருது?''

''உதயரெக்ஸோனாங்கிற குட்டி சினிமா நடிகையோடது...''

''உதயரெக்ஸோனாவா? புதுப் பெயரா இருக்கே?''

''ஏன் வச்சிக்கக் கூடாதா? உதயசந்திரிகா இல்லையா? இவ தங்கச்சி பேரு என்ன தெரியுமா? உதயஹமாம்...''

கோபி விளக்கம் சொல்லிக் கொண்டிருந்த போது அந்த நடிகையின் வீட்டு கீழ்த்தளத்தில் இருந்து பேச்சுக் குரல்கள் வந்தன. நான் கவனித்தேன்.

''சொன்னா நம்புங்க இன்ஸ்பெக்டர். நான் கௌரவமான நடிகை. எந்தத் தப்புக்கும் போக மாட்டேன்'' -இது பெண் குரல். உதயரெக்ஸோனாவின் குரல்!

''நீங்க போக மாட்டீங்க. ஆனா கஸ்டமர் உங்களைத் தேடி வருவாங்க. அப்படித்தானே? நான் வீடு முழுக்க ரெய்ட் பண்ணியே ஆகணும். 304, நீ கொல்லைப் பக்கம் பார், 708 நீ மொட்டை மாடியப் பாரு...''

எனக்கு விபரீதம் உறைத்தது.

''கோபி, வாடா, உடனே இந்த இடத்தை விட்டுப் போயா கணும்'' என்று பதற...

கோபியோ படு நிதானமாக, ''இருடா வர்றேன்'' என்று பூக்கள் உள்ள ஒரு தொட்டியின் மேல் சுவாரசியமாக விசில் செய்து கொண்டே அசிங்கம் செய்ய ஆரம்பித்தான்.

''டேய், போலீஸ் வரப் போகுதுடா...''

''இதெல்லாம் சின்னச் சின்னத் தப்புகள். யாருக்குத் தெரியும்? நீ வரவர எல்லாத்துக்கும் பயப்பட ஆரம்பிச் சிட்டே...''

மொட்டை மாடியின் கதவு திறந்து மேலே வந்த கான்ஸ் டபிள், ''டேய்! நில்லு! நில்லு...'' என்று துரத்தி வந்து எங்கள் இருவரின் கைகளையும் பிடித்தார்.

நாங்கள் நின்ற நிலை என்ன ஒரு நிலை! இரண்டு பேரும் பேண்ட்களைக் கழற்றிச் சுருட்டிப் பிடித்துக் கொண்டு!

''அய்யா! விட்டுடுங்க. எங்களைத் தப்பாப் புரிஞ்சுக் கிட்டிங்க. ஏதாச்சும் பணம் தர்றேன்'' என்று நான் கெஞ்ச ஆரம்பித்தேன்.

நிலைமை புரியாத கோபி, ''ஏண்டா கெஞ்சறே? இப்ப என்ன ஆகிப் போச்சி? இந்தப் பக்கமா மொட்டை மாடிகள்ல தாவித் தாவி ஒரு வாக் வந்தோம். அடக்க முடியலை என்னால. அதனால காலி செஞ்சேன். இது ஒரு தப்பா? வாங்க கான்ஸ்டபிள் சார், எந்த கோர்ட்ல வேணாலும் நியாயம் கேக்கலாம். திருடினேனா? கொள்ளையடிச்சேனா? பூ ரொம்ப வாடிப் போயிருக்கேன்னு...''

''வாயை மூடிக்கிட்டு வாங்கடா!'' என்று படிகளுக்கு

இழுத்தார். "பேண்ட் போட்டுத் தொடையையும் மூடிக் கிட்டு வர்றோமே..." என்று கெஞ்சின என் கெஞ்சலை நிராகரித்தார்.

"நீ சும்மா வாடா. என்ன ஆனாலும் நான் பார்த்துக் கறேன்" என்றான் கோபி தெனாவட்டாக.

இருவரையும் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு படிகளில் இறங்கின கான்ஸ்டபிள், "சார், இந்த ரெண்டு பேரும் மொட்டை மாடி வழியா தப்பிச்சிப் போகப் பார்த் தாங்க. பார்த்திங்களா இருக்கிற நிலைமையை?" என்றார்.

இரவு கவுனில் நின்றிருந்த நடிகை ஆச்சரியமாய்ப் பார்த்து, "இவங்க எப்படி என் மொட்டை மாடிக்கு வந்தாங்க?" என்றாள்.

"குருவி தூக்கிட்டு வந்து போட்டுச்சி. வாம்மா பேசாம. பெரிய பத்தினிதான்! எங்க ஜீப் சத்தம் கேட்டதுமே மொட்டை மாடி வழியா அனுப்பி வச்சதும் இல்லாம நாடகம் ஆடறியா? வா, வா..." என்றார் இன்ஸ்பெக்டர். "ஏண்டா நிக்கிறீங்க? பேண்ட்டைப் போடுங்கடா, நீங்களும் வேன்ல ஏறுங்கடா..."

கோபிக்கு இப்போதுதான் நிலைமை புரிந்தது. ஆனாலும் கோபமோ, ஆத்திரமோ, அவமானமோ வர வில்லை. மாறாக வெட்கப்பட்டான். தன் அபிமான துணை நடிகை உதயரெக்ஸோனாவுடன் இன்ஸ்பெக்டர் தன்னை சம்பந்தப்படுத்தி சந்தேகிக்கும் விஷயமே அவனுக்கு கிளுகிளுப்பாக இருந்தது.




போலீஸ் வேன் ஓடிக் கொண் டிருந்தது.

உதயரெக்ஸோனா அவமானமாய் தலையை தொங்கப் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தாள். எதிர் சைடில் நாங்கள் இரண்டு பேரும். தவிர இரண்டு கான்ஸ்டபிள்கள். முன்னால் ஜீப் போய்க் கொண்டிருந்தது. அதில் இன்ஸ்பெக்டர்.

இந்த இக்கட்டில் இருந்து எப்படித் தப்பிப்பது என்று நான் சுவாரசியமாக யோசித்துக் கொண்டிருக்க, சேட்டை கோபி எச்சில் தொட்டுத் தன் புருவங்களைத் தீட்டிக் கொண்டு, "நீங்க இதுவரைக்கும் எத்தனை படத்திலே நடிச்சிருக்கீங்க?" என்றான்.

உ.ரெக்ஸோனா முறைத்துப் பார்த்துவிட்டுத் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"என்னை சாதாரணமா நினைச்சிட்டீங்களா? பல கோடி மதிப்புக்கு இந்த நிமிஷம் நான் அதிபதி. தெரியுமா? ஸ்டே ஷனுக்குப் போனதும் என் செல்வாக்கைத் தெரிஞ்சுக்



குவாங்க. எங்க ரெண்டு பேரையும் 'பிரதம மந்திரி' மரி யாதையோட அனுப்பி வைப்பாங்க. என் கேள்விகளுக்கு ஒழுங்கா பதில் சொன்னா உங்களையும் கேஸ் இல்லாம விடுவிச்சுடுவேன்."

"நிஜமாவா? என்ன வேணும்னாலும் கேளுங்க, சொல்றேன்..." என்றாள்.

"இதுக்கு முன்னாடி இந்த மாதிரி வேன்ல போயிருக்கிங்களா?"

"இல்லைங்க. வேற மாதிரி வேன்லதான் போயிருக்கேன்..."

"அதில்லை. இந்த மாதிரி பிடிபட்டதுண்டா?"

"இல்லவே இல்லைங்க. நான் ரொம்ப நல்ல பொண்ணுங்க. சினிமாலகூட கற்பழிப்பு சீன்ல நடிக்க மாட்டேங்க. சொல்லுங்க, நாம எங்கே தப்பு செஞ்சோம்? இப்படி அபாண்டமா பிடிச்சிக்கிட்டுப் போறாங்களே..."

"ஒரு கதை சொல்றேன் ரெக்ஸோனா. ஒரு நிரப ராதியை கொலைக் குற்றத்துக்காகக் கைது செஞ்சி சிறையில போடறாங்க..."

"அப்புறம்?"

"அவனுக்கு ஆத்திரம் வருது. தப்பு செய்யாம தண்டனை அடைய மனசு இஷ்டப்படலை. கொலைக் கான தண்டனையை இனிமே யாராலயும் மாத்த முடியாது. ஆனா அவனோட மனசில நியாயம் கிடைக்கலையே. அதுக்காக அவன் ஜெயில்லேர்ந்து தப்பிச்சு வந்து ஒரு கொலையைச் செஞ்சிட்டு திரும்ப ஜெயிலுக்குப் போய் சரணடையறான். இப்போ தண்டனையை அவன் மனசு ஏத்துக்குது. எப்படி கதை?"

"ரொம்ப நல்லா இருக்குதுங்க..."

"அது மாதிரி நாம செய்யாத தப்புக்கு ஒருவேளை தண்டனை வழங்கப்பட்டால், நாம என்ன செய்யலாம்?"

"வாயை மூடிக்கிட்டு வாடா" என்று அதட்டின நான் அவன் காதோரமாகக் கிசுகிசுத்தான். "இந்த வேன்லேர்ந்து தப்புறதுக்கு ஏதாச்சும் யோசனை சொல்லு..."

"நான் சுவாரசியமாப் பேசிக்கிட்டு வர்றது உனக்குப் பிடிக்கலையா?"

"அறிவு இருக்கா உனக்கு? கோடிக் கணக்கான பணம் சம்பாரிச்சித் தர்ற ஒரு ரகசிய ஃபார்முலா வச்சிருக்கோம். அது என்ன, ஏதுன்னு ஆராயறது முக்கியமா, இது முக்கியமா?"

"நான் ஒண்ணும் பிறத்தியாரோட கண்டுபிடிப்புல லாபமடையணும்னு அவசியம் இல்லைடா. என் சொந்தக் கண்டுபிடிப்புல மின்சாரம் உற்பத்தி ஆரம்பிச்சிட்டேன்னா தமிழ்நாடு, கேரளா, கர்நாடகான்னு எல்லா மாநிலத்துக்கும் ஒப்பந்தம் போட்டு சப்ளை செய்வேன்..."

''என்னோட நீ தப்பிச்சி வரப் போறியா, இல்லையா?''

''சரி சரி, வர்றேன். எப்படித் தப்பலாம்?''

அப்போதுதான் எனக்கு என் பாண்ட் பாக்கெட்டுக்குள் ரீட்டாவிடம் பறிமுதல் செய்த துப்பாக்கி இருப்பது நினைவுக்கு வந்தது. எவ்வளவு அற்புதமான ஆயுதம்!

''கோபி, துப்பாக்கி இருக்குடா'' என்றேன் கிசுகிசுப்பாக.

அவன் கான்ஸ்டபிளின் கைகளில் இருப்பதைப் பார்த்து விட்டு, ''ஆமாம், அதான் எனக்கும் பயமா இருக்கு!'' என்றான்.

''முட்டாள், என்கிட்டே துப்பாக்கி இருக்குடா...''

''என்கிட்டே ரகசியமா எடுத்துக் கொடு, சொல்றேன்...''

''என்ன செய்யப் போறே?''

''நீ கொடு, சொல்றேன். மிச்சத்தை நான் பார்த்துக் கறேன்...''

நான் நைஸாக அந்த ரிவால்வரை எடுத்து சேட்டை கோபியின் கையில் தர... அவனோ அதை பகிரங்கமாக எடுத்து, ''ஹலோ, கான்ஸ்டபிள்களே... இதோ பாருங்க துப்பாக்கி'' என்று காட்டி உடனே அதன் முனையை உதயரெக்ஸோனாவின் நெற்றிப் பொட்டில் வைத்து, ''ம்... வேனை நிறுத்தச் சொல்லுங்க. துப்பாக்கிகளைக் கீழே போடுங்க...'' என்று மிரட்டினான்.

உடனே வேன் நிறுத்தப்பட்டது.

''நந்துப்பயலே, ரெண்டு துப்பாக்கியையும் எடுத் துக்கோ. கதவைத் திறப்பா, நாங்க மூணு பேரும் இறங் கறோம். வேன் திரும்பிப் பார்க்காம நேராய் போய்க்கிட்டே இருக்கணும். திரும்பிப் பார்த்திச்சி, இவளைப் பொசுக்கிச் சுட்டுடுவோம்'' என்றான்.

''சுட்டுப் பொசுக்கிடுவோம்னு சொல்லணும்டா...''

''ஏதோ ஒண்ணு. ஆனா சுடுவோம். கமான்!'' என்று இராணுவ கமாண்டர் போலக் கீழே குதித்தான். ரெக் ஸோனாவை இடுப்பருகில் கைத்தாங்கல் கொடுத்துக் கீழே இறக்கினான். நானும் இறங்கினேன்.

வேன் மறையும் வரை அவள் நெற்றியில் துப்பாக்கியை வைத்திருந்துவிட்டு, பிறகு எடுத்தான். அந்தப் பக்கமாகப் போன ஆட்டோவை அழைத்தான்.

''நீங்க இதிலே போங்க. உங்க வீட்டுக்குப் போங்க.''

''நீங்க?'' என்றாள்.

''எங்களுக்குக் கதை முடியற வரைக்கும் ஒண்ணும் ஆகாது. நீங்க போங்க...''

''மறுபடி அவங்க என் வீட்டுக்கு வர மாட்டாங்களா?''

''வந்தாலும் பிரயோஜனமில்லை. நாங்க இருந்தாதானே கேஸ் நிற்கும்?''

''ரொம்ப நன்றிங்க...''

''இன்னொரு நாள் சாவகாசமா உங்க மொட்டை மாடில



சந்திக்கலாம். என் ஆள் வீட்டுக்குப் போற வழிலதான் உங்க மொட்டை மாடி. வர்றேன். டாட்டா...''

ஆட்டோ மறையும் வரை கையசைத்தான். போலீஸ் துப்பாக்கிகளை சாக்கடையில் கடாசிவிட்டு நடந்தோம்.

''வேன் திரும்பி வரப் போகுதுடா. நாம எங்கே போகப் போறோம்?''

''சின்ன சாவித்ரி வீடு இங்கேர்ந்து ரொம்பப் பக்கம். வா...''

''நேரம் கெட்ட நேரத்தில் போனா அவங்க அப்பா, அம்மா தப்பா நினைச்சுக்க மாட்டாங்களா?''

''சின்ன சாவித்ரி மட்டும் தனியா இருக்காப்பா. முறுக்கு போட்டு ஹோல்சேல் வியாபாரம் பண்றா. பீச்சில விக்கிற முறுக்குல பாதி இவ தயாரிப்புதான். எல்லாப் பசங்களும் இவகிட்டேதான் வாங்குவாங்க. இவகிட்டே ரெண்டே ரெண்டு விஷயம் நாம சகிச்சுக்கிட்டாகணும்...''

''என்ன அது?''

''எப்பப் பாரு வெத்தலை போடுவா...''

''போடட்டுமே... அதனால நமக்கென்ன?''

''வாயில இருக்கிறதைத் துப்பாம சிரிப்பா, பேசுவா. எதிர்க்க நிக்கிறவன் சட்டை பூரா புள்ளிப் புள்ளியா டிசைன் ஆயிடும்...''

''சரி, நான் கொஞ்சம் தூரமாவே நின்னுக்கறேன். இன்னொரு அன் சகிக்கபிள் விஷயம்?''

''மொழி! கொஞ்சம் கூர்ந்து கவனிச்சாதான் புரியும். மெட்ராஸ் பாஷை! அதில் வைகை எக்ஸ்பிரஸ் ஸ்பீடுல பேசுவா. எனக்கு பழகிடுச்சி. உனக்கு அவ பேசறது ஏதாச் சும் புரியலைன்னா என்னைப் பாரு. நான் மொழி பெயர்த்துச் சொல்றேன். இதான் அவ வீடு..''

சேட்டை கோபி வீட்டு வாசலை அணுகி பெல் அடிக் காமல், கதவு தட்டாமல், கண்டக்டர் போல ஒரு ட்ரிபிள் விசில் வாயால் கொடுத்தான்.

கதவைத் திறந்தாள் சின்ன சாவித்ரி.

''ன்யா, ந்நேரம்? பாணாக்காரனாங்காட்டியம்னு முச்சிணு வந்து பார்த்தா? தாரு?''

தமிழ்தானா என்று குழப்பமே வந்து விட்டது. நான் பரிதாபமாக கோபியைப் பார்க்க அவன், ''இதுகூடப் புரியலையா? என்னய்யா இந்த நேரம்? பால்காரனோன்னு முழிச்சிக்கிட்டு வந்து பார்த்தா? இது யாரு?'' என்று என்னிடம் மொழிபெயர்த்து விட்டு அவளிடம், ''என் தோஸ்த். வா, முதல்ல உள்ளே போய்ப் பேசிக்கலாம். பசிக்குது. சாப்பிட என்ன வச்சிருக்கே?''

''கடை நிறைய முறுக்கு இருக்கு'' என்று அவள் பாஷையை எனக்கு மொழிபெயர்த்தான் கோபி.

இரண்டு பேரும் தலா இருபது முறுக்குகள் சாப்பிட்டு

விட்டு இன்னும் கொஞ்சமே கொஞ்சம் இருந்த ராத்திரியை தூங்கிக் கழித்தோம்.




காலையில் சின்ன சாவித்ரி வீட்டுக் கொல்லைப் பக்கத்தில் பல் தேய்த்துக் கொண்டே கோபியைக் கேட்டேன். ''இந்தப் பொண்ணை நீ லவ்வு பண்ணுறியா?''

''அட! நீ ஒண்ணு... அதெல்லாம் இல்லை'' என்றான்.

''உன்னை ஒரு மாதிரியா பாக்கறாளே?''

''ஒன் ஸைட் லவ்வுப்பா! இந்த முகரையை எவனாச்சும் லவ் பண்ணுவானா?''

''பின்னே ஏன் லவ் பண்ற மாதிரி நடிக்கிறே?''

''தினம் பத்துப் பதினைஞ்சு முறுக்கு ஓசில கிடைக்குதே... யார் கொடுப்பா? என்னைக்காச்சும் ஒரு நாள் விஷயம் சீரியஸ் ஆகறப்போ கடைசி சீன்ல வச்சிச் சொல்லிடுவேன். 'சாவித்ரி, நீ செத்துப் போன என் சிஸ்டர் மாதிரியே இருக்குறதாலே நான் சிஸ்டராத்தான் நினைச்சி இத்தனை நாளும் பழகினேன்'னு. அதை விடு... குளிச்சிட்டு இந்த ஃபார்முலா சமாச்சாரத்தைக் கவனிக்கணும்...''

''இதை நிறைய... வேணாம், ஒரு அஞ்சி லட்சத்துக்காவது யார்கிட்டேயாவது விக்க முடியுமான்னு பார்க்கணும்...''

இருவரும் குளித்து விட்டு அதே உடைகளை உடுத்திக் கொண்டு புறப்பட்டோம்.

''உன் கடை எந்த நிலைமையிலே இருக்குன்னு பார்த்திடுவோமா கோபி?''

''வேணாம். டேன்ஜர். அங்கே நமக்காகக் காத்திருப்பாங்க. என் கடை ஏற்கெனவே மோசமான நிலையிலேதான் இருக்கும். அதைவிட மோசமா யாரும் ஒண்ணும் செஞ்சுட முடியாது. பய வந்து கடையில உக்காந்திருப்பான். இல்லைன்னாலும் இன்னைக்கு ஸ்பெஷல் விடுமுறை. லட்சம் வர்ற வழியைப் பார்ப்பியா... வாடா...''

ஆட்டோ பிடித்து அண்ணா சாலையில் இறங்கிக் கொண்டோம்.

யாரிடம் விசாரிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த போது...

ஒரு மொட்டைத் தலையன் எங்களிடம் வந்தான்.

''சார், மிஸ்டர் நந்தகுமார் நீங்கதானே?'' என்றான்.

அட! இவனுக்கு என்னை எப்படித் தெரியும்?

''ஆமாம். என்ன விஷயம்?''

''உங்ககிட்டே இருக்கிற விலை மதிப்பில்லாத ஃபார்முலா சம்பந்தமா அந்தக் கார்ல உக்காந்திருக்கிற எங்க



முதலாளி பேச விரும்புறார். வர்றீங்களா?''

''வாடா, போய்ப் பேசலாம்'' என்றான் கோபி.

''இரு. மிஸ்டர் மொட்டை, என்கிட்டே அது இருக்கிறது உங்க முதலாளிக்கு எப்படித் தெரியும்?''

''அது அவரையே கேட்டுக்கங்க...''

''நந்திகிட்டே என்னடா பேச்சு? சாமிகிட்டே பேசிக்கலாம் வா'' என்று உவமையாகப் பேசி என்னை யோசிக்க விடாமல் இழுத்துக் கொண்டு போன கோபியும், நானும் காரை நெருங்கினதும்... கதவுகள் சாத்தப்பட்டன.

கார் விரைந்தது.

திமிறின எங்கள் மூக்கில் ஏதோ ஸ்பிரே செய்யப்பட...

நாங்கள் திடீரென்று மயங்கிப் போனோம்.

நான் கண் விழித்த போது ஒரு சிறையைப் போன்ற அறையில் இருப்பதை உணர்ந்தேன். அருகில் சேட்டை கோபி மயக்கம் முடிந்து இப்போது குறட்டையுடன் உறங்கிக் கொண்டிருந்தான். மணி பார்த்தேன். 4. இவ்வளவு நேரமா மயங்கினோம்?

நான் அவன் மேல் அவசரமாகத் தட்ட, சட்டையில் இருந்து தூசு பறந்தது. அவன் அசையவில்லை. அறைக்கு வெளியே யாராவது இருக்கிறார்களா என்று கம்பி போட்ட கதவின் வழியாகப் பார்த்தேன். யாரையும் காணோம்.

''டேய் கோபி... எந்திரிடா'' என்று அவன் மேல் மல்யுத்தம் நடத்தியபின் லேசாக அசைந்து கொடுத்தான். ஒரு குகை வாசலைப் போல வாயை அமைத்து ஒரு கொட்டாவி விட்டுவிட்டு எழுந்தான்.

''நான் யாரு?'' என்றான்.

''டேய்! நான் எங்கே இருக்கேன்னுதான் கேக்கணும். இப்படி எல்லாம் கேக்கக் கூடாது...''

''சரி, நான் எங்கே இருக்கேன்?''

''வில்லனோட சிறையில இருக்கோம்டா. எல்லாம் உன்னாலதான். மொட்டைத் தலையன் பேச்சை நம்பி கார்கிட்டே போனதுதான் தப்பாப் போச்சி. இன்னும் கொஞ்ச நேரத்திலே அவங்க வரப் போறாங்க. நம்மை டிசைன் டிசைனா சித்ரவதை செய்யப் போறாங்க...''

''நான் இருக்க நீ எதுக்கும் பயப்படாதே. துப்பாக்கி வச்சிருக்கேதானே?''

நான் தொட்டுப் பார்த்துவிட்டு, ''இருக்கு. கர்சீப்ல சுத்தி ஜட்டிக்குள்ளே செருகி வச்சிருக்கேன்...''

''அந்த ஃபார்முலா பேப்பரை எடு...''

நான் ஒவ்வொரு பாக்கெட்டாகத் தேடி விழித்தேன்.

''காணோம்டா! சின்ன சாவித்ரி வீட்லதான் பாத்ரூம்ல வச்சேன். குளிக்கிறப்போ திரும்ப எடுத்துக்க மறந்துட்டேன்...''

''அதுவும் நல்லதுக்குத்தான். முதல்ல இது எதுக்கான

ஃபார்முலான்னு தெரிஞ்சிக்கலாம். கொஞ்ச நேரத்திலே அவங்க நம்மைக் கேள்வி கேப்பாங்க. நீ எதுவும் பட்டுக்காதே. எல்லாத்துக்கும் நான் சாமர்த்தியமா பதில் சொல்றேன். நான் எது சொன்னாலும் நீ காலை வாரி விட்டுடாம ஆமோதிச்சிடு. போதும். புரிஞ்சுதா?''

''சரி'' என்றேன்.

''அவங்க யாரையும் காணோம். வர்ற வரைக்கும் தூங்கறேன். வந்ததும் என்னை எழுப்பு. என்ன?'' என்று தூங்க ஆயத்தமானான்.

''கோபி, இங்கேர்ந்து தப்பிச்சிப் போக முயற்சி பண்றதா இல்லையா?''

''முதல்லயே ரூமை ஒரு நோட்டம் விட்டுட்டேன். கருங்கல் சுவரு பார்த்தியா? பேசாம இரு. சமயம் வர்றப்போ தப்பிக்கலாம்.''

''புத்த சமயமா? போடா தூங்குமூஞ்சி!'' என்று நான் அறையின் கதவருகில் அமர்ந்து கொண்டு கம்பிகளை எண்ண ஆரம்பித்தேன்.

அரை மணி நேரம் கழித்து மொட்டைத் தலையனும் தாடிவாலாவும் வந்தார்கள்.

''என்னடா சோட்டாப் பசங்களா... எங்களையே டபாய்க்கப் பார்த்திங்களே... நடக்குமா? வாங்க. தலைவர் பார்க்கணும்னு பிரியப்படறாரு...''

கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார்கள்.

கோபி எழுந்து கொண்டு, ''வாங்க, கண்ணைக் கட்டலையா?''

''தேவையில்லை.''

''தொழிலுக்குப் புதுசு போலருக்கு. உங்க ரகசிய இடத்தைப் பார்த்துட்டு நாளைக்கு வெளில சொல்லிட மாட்டமா? கண்ணைக் கட்டி அழைச்சுட்டுப் போய்யா...''

''அதுக்கு அவசியமே இல்லை'' என்றான் மொட்டை.

''நாங்க இங்கே பார்க்கிற எதையும் வெளில சொல்ல மாட்டோம்கிற ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை. அப்படித்தானே?''

''அப்படி இல்லை...'' என்று சீக்குக் கோழியின் கொக்கரக்கோ போல ஒரு வினோத சத்தத்தில் சிரித்த மொட்டை, ''எங்க காரியம் ஆனதும் நீங்க இந்த இடத்தை விட்டு வெளில போகப் போறதே இல்லை'' என்றுவிட்டுத் தன் கழுத்தருகே கையை வைத்து 'விஷக்' என்றான்.

''காலைலதான் ஷேவ் செஞ்சோம். அதனால பரவாயில்லை. சும்மா இப்படியே உங்க தலைவரைச் சந்திக்கிறோம்...'' என்றேன்.

''உங்க தலையைச் சீவிடுவோம்னு சொன்னேன்...''

''ரொம்பக் கலைஞ்சிருக்கா? எதுக்கு சிரமம்... சீப்பு இருந்தாக் கொடுங்க. நாங்களே சீவிக்கிறோம்...''



''உங்களைக் கொல்லப் போறோம்டா முண்டங்களா'' என்று கத்தினான் தாடி பொறுமை இழந்துபோய்.

''அவ்வளவுதானே? எதுக்குக் கத்தறே? சாவு என்ன பெரிய விஷயமா? ஒரு நிமிஷ சமாச்சாரம். ஏகப்பட்ட கடன் தொல்லைலேர்ந்து சுலபமாத் தப்பிச்ச மாதிரி இருக்கும்'' என்று தோள் தட்டிப் பேசினான் சேட்டை கோபி.

அந்த அறையை விட்டு வெளியே அழைத்துச் சென்றதும் ஒரு சுவர் அருகில் மான் தலை மாட்டப்பட்டிருந்தது. மொட்டை அதன் கொம்புகளைப் பிடித்துச் சுற்றியதும் சுவர் இரண்டாகப் பிளந்து வழி விட்டது.

இவர்கள் உள்ளே போனதும் மூடிக் கொண்டது. அடுத்து யானை தலை. அதன் தும்பிக்கையை இழுத்ததும் ஒரு கதவு சர் என்று சர்க்கஸ் கூண்டின் கதவு போல மேலே சென்றது. உள்ளே போனதும் மூடிக் கொண்டது.

''இந்த மாதிரி ரகசிய வழிகள் செட் செய்யறதுக்குன்னே ஸ்பெஷலிஸ்ட் ஆசாரி எல்லாம் இருக்காங்க போலிருக்கு'' என்றான் கோபி.

இப்போது ஒரு விஸ்தாரமான ஹாலில் நாங்கள் இருந்தோம். ஒரு பக்கம் டிரம் டிரம்மாக அடுக்கப்பட்டிருந்தன. ஒரு பக்கம் கள்ளிப் பெட்டிகள். ஒரு பக்கம் அட்டைப் பெட்டிகள்.

''மிஸ்டர் மொட்டை, எனக்கு ரொம்ப நாளா ஒரு சந்தேகம். கேக்கட்டுமா?'' என்றேன்.

''கேளு...''

''இந்த ட்ரம், பெட்டி இதிலே எல்லாம் என்ன இருக்கு? எப்பயாவது சண்டை சீன் வந்தா உருள்றதுக்காகவே வாங்கி அடுக்கி வச்சிருக்கீங்களா?''

''அதிகப் பிரசங்கி மாதிரிக் கேக்காதே. இதெல்லாம் சரக்கு வர்றது. ட்ரம்முல கள்ளச் சாராயம் போகும். பெட்டியிலே கஞ்சா, அபின் வரும்...''

''பண்டம் மாற்று முறை மாதிரின்னு சொல்லுங்க...''

அந்த ஹாலில் ஏராளமான தூண்கள் இருக்க... ஒவ்வொரு தூண் முன்புறம் ஒரே மாதிரி யூனிஃபார்மில் தடியர்கள் நின்றார்கள்.

ஒரு புறத்தில் மேடை மாதிரி இருந்தது. மேடையில் ஒரு பெரிய மேஜை. சாய்வு மேஜை. அந்த மேஜையில் ஒரு விமானத்தின் காக்பிட் அறையில் உள்ள மீட்டர்கள், பேனல்கள் போல் ஒரே கசமுசா வர்ண வர்ண பல்புகள். சில கண் சிமிட்டின. குக்குக் என்று சில சப்தமிட்டன.

மொட்டை அந்த மேஜையில் ஒரு பித்தானை அழுத்தி, ''தலைவரே, அவங்க ரெண்டு பேருக்கும் மயக்கம் தெளிஞ்சி போச்சி. அழைச்சுட்டு வந்திருக்கேன்'' என்றான்.

''அவர்களை சகல மரியாதைகளுடன் நாற்காலியில் அமரச் சொல். இதோ வந்துவிட்டேன்'' என்று அசரீரி ஒலித்தது.

''சரி தலைவரே...''

''உங்க தலைவர் என்ன பிசாசா? குரல் மட்டும் கேக்குது...''

''இப்ப வருவார். உக்காருங்க ப்ளீஸ். உங்களை மரியாதையா நடத்தச் சொல்லிருக்கார். அவர் வர்றப்போ நீங்க நின்னுக்கிட்டிருந்தா எங்களைத்தான் கோபிச்சுக்குவார். என்ன சாப்பிடறீங்க?''

''ரஸகுல்லா கிடைக்குமா?'' என்றான் கோபி.

''எனக்கு ஆப்பிள் ஜூஸ் போதும். தொட்டுக்க நெய்யில் வறுத்த முந்திரிப்பருப்பு...''

கோபி என் காதருகில், ''பெரிய கும்பல்டா. கண்ட்ரோல் மேஜை எல்லாம் வச்சி எலெக்ட்ரானிக்ஸ் பயன்படுத்தி எல்லாம் தப்பு வேலை செய்றாங்க. இந்தக் கும்பலை பிடிச்சிக் கொடுத்தா அரசாங்கம் செமத்தியா பணம் கொடுக்கும்'' என்றான்.

''அவர் என்ன கேக்கறார்?'' என்றான் தாடி.

''பிஸ்தா பருப்பு இங்கே கிடைக்குமா, கிடைக்காதான்னு சந்தேகப்படறான்.''

''எங்களை அவமானப்படுத்தறீங்க. சூரியனுக்குக் கீழே எது கேட்டாலும் கிடைக்கும்.''

''அப்படின்னா ஒரு பிளேட்ல மேகம் எடுத்துட்டு வர்றீங்களா?''

மொட்டை என் ஹாஸ்யத்தை ரசிக்கவில்லை.

நாங்கள் கேட்ட அயிட்டங்கள் வந்தன. பாதியில் பிடுங்கிக் கொண்டால் என்ன செய்வதென்ற அவசர அவசரமாகச் சாப்பிட்டு முடித்தோம்.

''இந்தக் கிண்ணத்தில் இருக்கிற மிச்ச ரஸகுல்லாவைப் பார்சல் கட்டிக் கொடுக்க முடியுமா?'' என்றான் அல்பன் கோபி.

இப்போது கண்ட்ரோல் மேஜைக்குப் பின்னால் இருந்த சுவர் ஒரு சைடாக நகர்ந்து கொள்ள, ஒரு சக்கர நாற்காலியில் வைத்துத் தலைவரை இரண்டு புஷ்பவதிகள் தள்ளி வந்தார்கள். மருந்துக்குக் கொஞ்சம் கொஞ்சம் உடுத்தி இருந்தார்கள்.

தலைவர் வழக்கமான கொள்ளைக் கூட்டத் தலைவரைப் போல ஒரு கண் இல்லாமல், அந்த இடத்தில் துணி தொங்க விட்டுக் கொண்டு, கோட் அணிந்து, கையில் பைப் வைத்துக் கொண்டு, ஒற்றைக் கால் இல்லாமல் இரண்டு அலுமினியக் கட்டைகள் வைத்துக் கொண்டு இருந்தார்.

எங்கள் அருகில் சக்கர நாற்காலியை நிறுத்தினார்கள்.

''விருந்தாளிகளுக்கு நல்வரவு'' என்று வணக்கம் வைத்தார் தலைவர்.

''மங்களம் உண்டாகட்டும்'' என்றான் கோபி சாமியார்



போல ஆசீர்வதித்து.

''சான்ஸ் இல்லைங்க. போன வாரம்தான் கலைச்சேன்'' என்றாள் தள்ளி வந்த இருவரில் ஒருத்தி. ''என் பேரு மங்களம்.''

''மீண்டும் உண்டாகட்டும்'' என்றான்.

''தமாஷாகப் பேசுகிறீர்கள். அது எனக்குப் பிடிக்கும்'' என்றார் தலைவர்.

''என்னத்துக்கு செந்தமிழில் இயம்பிக்கிட்டு அவஸ்தைப் படறிங்க தலைவரே?'' என்றேன்.

''தம்பி. அப்படிச் சொல்லாதே. செய்வது தவறான தொழிலாக இருந்தாலும் நான் தமிழ் மேல் வைத்துள்ள பற்று மாறாதவன். சரி, போகட்டும்... நாம் நம் விஷயத்திற்கு வரலாமா?''

''வரலாம்'' என்று நாற்காலியைத் தூக்கி இரண்டு இன்ச் முன்னால் போட்டுக் கொண்டு அமர்ந்தேன் நான்.

''நமக்குள் ஒளிவு, மறைவு எதுவும் வேண்டாம். புரிந்ததா? மனம் திறந்து பேசலாம்.''

''இந்தக் குட்டிகளை எங்கே புடிச்சீங்க?'' என்றான் கோபி.

''தகாத கேள்வி! தகாத கேள்வி!''

''ஒளிவு மறைவு இல்லாம பேசச் சொன்னிங்க. பேசினேன்...''

''ஒரு விஞ்ஞானிக்கே உரிய குறும்பான சிந்தனை உங்களிடம் இருக்கிறது. அதை நான் ரசிக்கிறேன்...''

''விஞ்ஞானியா? யாரு?'' என்றேன் நான்.

''சும்மா இருடா நந்துப் பயலே. உன்னையா சொல்றாரு? என்னைத்தான்...''

''நீங்கள் இருவருமே சாமர்த்தியசாலிகள்தான். நேற்று விமான நிலையத்தில் ரீட்டாவை மடக்கி பொட்டலம் வாங்கியதிலேயே உங்கள் வீரம் புரிகிறதே. அதோடு இல்லாமல் பொம்மைக்குள் ஃபார்முலா இருப்பதை யூகித்து எடுத்தீர்களே... எவ்வளவு பாராட்டினாலும் தகும்.''

''இதெல்லாம் எப்படித் தெரியும்?''

''ரீட்டா ஏமாந்து போனதைத் தொலைபேசியில் தெரிவித்தாள். தாடி துரையும் தான் ஏமாந்ததைத் தெரிவித்தான். உடனே ஆட்களோடு அவனை உங்கள் இருப்பிடம் அனுப்பினேன். நீங்கள் சாமர்த்தியமாகத் தப்பி விட்டீர்கள். உங்கள் வீட்டில் உடைந்த பொம்மையும், ஃபார்முலா இருந்த வெற்றுக் குப்பியுமே கிடைத்தன. உங்கள் ஆராய்ச்சிக் கூடத்தைப் பற்றியும் சொன்னார்கள். முயல், எலிகளைப் பார்த்ததையும் சொன்னார்கள். குடுவையில் இருந்த கூழாங்கற்களில் இருந்து தாங்களும் இதே ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதை உணர்ந்தோம். எங்கள் நபர் போனபோது பர்னர் எரிந்து கொண்டே இருந்ததாம்.

ஃபார்முலாவைப் பார்த்ததும் உடனே அதைச் செயலில் ஈடுபடுத்த இறங்கியிருக்கிறீர்கள். என்ன ஒரு சுறுசுறுப்பு! மேதைகளே, உங்களுக்கு நான் தலை வணங்குகிறேன்...''

எனக்கு இப்போதுதான் புரிந்தது. சேட்டை கோபியின் மின்சார ஆராய்ச்சிக் கூடத்தைப் பார்த்ததும் அவனையும் என்னையும் பெரிய விஞ்ஞானிகளாகக் கருதி விட்டார்கள். அதனால்தான் இந்த மரியாதை!

சரி, அதே ஆராய்ச்சி என்கிறாரே... அந்த ஃபார்முலா எதற்கானது?

''நண்பர்களே, அந்த வீடு முழுவதும் சோதனை போட்டு விட்டோம். அந்த ஃபார்முலாக் காகிதம் கிடைக்கவில்லை. நீங்கள் மயக்கமாய் இருந்தபோது உங்களையும் சோதனை போட்டு விட்டோம். உங்களிடம் ஃபார்முலா இல்லை. ஒரு துப்பாக்கிதான் நண்பர் வைத்திருக்கிறார். அதன் பல்லையும் பிடுங்கி விட்டோம்...''

''துப்பாக்கிக்கு ஏது பல்லு?''

''அதில் உள்ள தோட்டாக்களை எடுத்து விட்டோம். இப்போது நீங்கள்... அது என்ன சொல்வார்கள்? நிரோத் பிரியாணியா?''

''நிரோத் பிரியாணி இல்லை தலைவரே... நிராயுதபாணி!'' என்றான் தாடி.

''அ! நிராயுதபாணி ஆகி விட்டீர்கள். எங்கே அந்த ஃபார்முலா?''

''இதற்கு விஞ்ஞானி சேட்டை கோபி பதில் சொல்வார்'' என்றேன்.

''தலைவரே... நான் எவ்வளவு அறிவாளின்னு உங்களுக்குத் தெரியும். நானே சொந்தமா ஆராய்ச்சி நடத்திக் கிட்டிருக்கேன். இந்த சமயத்திலே அற்புதமான ஃபார்முலா கிடைச்சது. பார்த்தேன். புரிஞ்சுக்கிட்டேன். எங்கயாச்சும் வச்சா மத்தவங்க பார்த்து பயன்படுத்திடுவாங்கன்னு கிழிச்சிப் போட்டுட்டேன். ஃபார்முலா இப்போ என் மூளையிலே இருக்கு...''

''இதைத்தான் நான் யூகம் செய்தேன். ஒரு புத்திசாலி அப்படித்தான் செய்வான்...''

''எல்லாம் சரி. அது என்னத்துக்கான ஃபார்முலா?'' என்றேன்.

''புரியாதது போலப் பேசுகிறீர்களே...''

''புரியும். இருந்தாலும் உங்கள் வாயால செந்தமிழ்ல செப்பினா கேக்க சுவையா இருக்குமேன்னு பார்த்தேன்...''

''செப்புகிறேன் தோழர்களே. எனக்கு பம்பாயில் ஒரு தொடர்பு உண்டு...''

''உங்ககிட்டே இருக்கிற காசுக்கு ஊருக்கு ஒரு தொடர்பு இருக்கலாம். தப்பில்ல...''



''அந்த மாதிரித் தொடர்பு இல்லை. வியாபாரத் தொடர்பு. இதேபோல அங்கே ஒரு கிட்டங்கி வைத்துள்ளேன்...''

''பிரான்ச் ஆஃபீஸ் மாதிரி?''

''ஆமாம். பம்பாயில் சோன்பப்டா என்னும் பெயரை கேள்விப்பட்டிருக்கிறீர்களா?''

''சோன்பப்டி தெரியாத ஆளு இருப்பானா? டேஸ்ட்டா இருக்கும்...''

''தமாஷ் வேண்டாம் நண்பரே. சோன்பப்டி அல்ல, சோன்பப்டா. அவர் ஒரு தலை சிறந்த விஞ்ஞானி. எய்ட்ஸ் நோய்க்கு கூழாங்கல்லில் இருந்து ஒரு மருந்து தயாரிக்கும் ஃபார்முலாவைக் கண்டுபிடித்தார். அந்த மருந்துக்கு ஸ்டோன்சன்யுவர்சின் என்று பெயர் சூட்டினார். தன் தயாரிப்பை உலகுக்கு அறிமுகப்படுத்துமுன் எங்களால் கடத்தப்பட்டார். வலுக்கட்டாயமாக ஃபார்முலா வாங்கப் பட்டதும் கொல்லப்பட்டார். அந்த ஃபார்முலாதான் நீங்கள் கைப்பற்றியது. தற்சமயம் நண்பரின் மூளைக்குள் உள்ளது. நமக்குள் ஒரு ஒப்பந்தம் போட்டுக் கொள்வோம். அந்த ஃபார்முலாவை நீங்கள் சொல்ல வேண்டும் என்று அவசியம் இல்லை. ஆனால் என்னுடைய பிரத்யேக ஆராய்ச்சிக் கூடத்தில் ஸ்டோன்சன்யுவர்சின் மருந்தைத் தயாரித்துத் தாருங்கள். அதை நான் விற்பனை செய் கிறேன். வரும் லாபத்தில் ஆளுக்குப் பாதி. என்ன சொல் கிறீர்கள்?''

எனக்கு வந்த சிரிப்பை சிரமப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டேன். கூழாங்கல்லில் இருந்து எய்ட்ஸ் மருந்தா? மெட்ராசில் கோபி ஒருத்தன்தான் கிறுக்கன் என்று நினைத்தால், பம்பாயிலும் ஒரு கிறுக்கன் இருந்திருக் கிறானே... அவனை விஞ்ஞானி என்று நம்பி இந்தக் கிறுக்குக் கும்பல் மிரட்டியிருக்கிறது. அவனும் தெரிந்த ஏபிசிடி வைத்துக் கொண்டு எதையோ கிறுக்கித் தந்து விட்டுச் செத்து விட்டான். இப்போது கோபியை விஞ் ஞானி என்று நினைத்து விட்டார்கள். இவனும் ஆராய்ச்சிக் கூடம் வைத்து, மூட்டை மூட்டையாய் கூழாங்கற்கள் வைத்துக் கொண்டு எலி, முயல் எல்லாம் வளர்க்கிறானா... இவனும் அதே ஆராய்ச்சியில்தான் ஈடுபட்டிருப்பதாக சந்தேகமே இல்லாமல் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

எப்படிச் சமாளிக்கப் போகிறான்?




எதுவுமே தெரியாது. எய்ட்ஸ் நோய்க்கான மருந்து தயாரி என்றால் எப்படித் தயாரிப்பது? காபிகூட தயாரிக்கத் தெரியாதே...

''தலைவரே, நான் இந்த ஆராய்ச்சியில ஈடுபடலை'' என்றான் அவசரமாக கோபி.

''பிறகு?''

''கூழாங்கல்லில் இருந்து மின்சாரம் தயாரிக்கிற ஆராய்ச்சிதான் செய்றேன்...''

''யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? கல்லில் இருந்து மின்சாரமா? ஒப்பந்தத்திற்குச் சம்மதிக்கப் போகிறீர்களா, இல்லையா?''

''அதில் ஒரு பிரச்சனை இருக்குங்க. அந்த ஃபார் முலாவை ஒரே ஒரு தடவைதான் பார்த்தேன். அதுவும் அவசரத்தில பார்த்தேன். அதனால மறந்துபோச்சி...''

''பொய் சொல்லாதீர்கள்...''

''அவன் சொல்றது நிஜம்தாங்க'' என்றேன். ''சமயத்தி லே அவனுக்குத் தன் பேர்கூட மறந்து போகும். திடீர் திடீர்னு என் பேரென்னடான்னு என்னைக் கேப்பான். ஒரு தடவை என் ஊருக்கு போன் செஞ்சி, அவன் கடைக்கு வழி கேட்டான். அவ்வளவு ஞாபக மறதி!''

''இந்தக் கதை இங்கு வேண்டாம் அப்பனே. வேறு ஏதாவது இருந்தால் சொல்...''

''சரி, சொல்றேன். ஒரு ஊர்ல ஒரு பாட்டி, ஒரு வடை சுட்டுக்கிட்டிருந்திச்சி. அப்ப ஒரு காக்கா...''

''யாரங்கே?''

''நான்தான்'' என்றான் மொட்டை.

''நானும்தான்'' என்றான் தாடி.

''இவர்கள் இருவரையும் நம் ஆராய்ச்சிக் கூடத்திற்கு இழுத்து வாருங்கள்...''

''மங்களம், நீயும் வர்றியா?'' என்றான் கோபி.

''உன் பேரென்னம்மா?'' என்றேன் மற்றவளிடம்.

''விஜயலிரில்!'' என்றாள்.

அந்த ஆராய்ச்சிக் கூடம் ஏ.சி. செய்யப்பட்டு அமர்க்கள மாக இருந்தது. ஏராளமான குடுவைகள், பியூரெட்டுகள், டெஸ்ட் டியூபுகள், பிப்பெட்டுகள், கார்ப்பெட்டுகள். குப்பிகளில் அமிலங்கள், உதவுவதற்கு அமலாக்கள். பெயர் எழுதி ஒட்டின இரசாயனப் பொருள்கள், பர்னர்கள், குழாய்கள். ஒரு பக்கத்தில் மூட்டை மூட்டையாய் இரு நூறு மூட்டைகள்!

''அது என்ன மூட்டை?''

''தெரியாதது போலக் கேட்காதீர்கள். கடலோரப் பகுதிகளில் இருந்தும், பாறைப் பகுதிகளில் இருந்தும் லோடு லோடாகக் கொண்டு வந்து கூழாங்கற்களை மூட்டை கட்டி வைத்திருக்கிறோம்.''

கோபி உடனே காதலாய் அந்த மூட்டைகளைப் பார்த்தான்.



''நீங்கள் உங்கள் ஆராய்ச்சியைத் தொடங்கலாம். இந்த ஒரே ஒரு பெண் மட்டும் உங்களுக்கு உதவியாய், காவலாய் இருப்பாள். எது வேண்டுமானாலும் உள் தொடர்பு வசதிச் சாதனத்தில் கேளுங்கள். அனுப்பப்படும். அந்த மருந்தைத் தயாரிக்காமல் உங்களை விடுவதில்லை. ஏமாற்ற நினைக்காதீர்கள். தப்பவும் நினைக்காதீர்கள். இவள் பெண்தானே என்று நினைக்காதீர்கள். பெண் புலி. கராத்தே, ஜூடோ, குரங்குப்பூ எல்லாம் கற்றவள். ம்... வாருங்கள், எல்லோரும் போகலாம்'' என்றார் தலைவர்.

அவரை நாற்காலியுடன் தள்ளிக் கொண்டு எல்லோரும் வெளியேறினார்கள். அந்தக் காவல் பெண் மட்டும் பேண்ட், சட்டை போட்டுக் கொண்டு, சூயிங்கம் மென்று கொண்டு, தோளில் ஒரு இயந்திரத் துப்பாக்கி மாட்டிக் கொண்டு ஒரு நாற்காலியில் அமர்ந்து எங்களையே பார்த்தாள். பார்வையா அது? பாஸ்பரஸ் உஷ்ணம்!

''ம்... ஆராய்ச்சியை ஆரம்பியுங்கள்'' என்றாள்.

''ஆரம்பிடா கோபி'' என்றேன்.

''முதல்ல கல்லு பொறுக்கணும்டா. அரை இன்ச் வெட்டு இருக்கிற கல்லா எடுத்துக்கணும். வா, சேர்ந்து பொறுக்கலாம்.''

தன் பைத்தியக்காரத்தனத்தில் என்னையும் சேர்த்து விட்டானே பாவி!

இரண்டு பேரும் மூட்டைகளைக் கீழே கொட்டி கல் பொறுக்க ஆரம்பித்தோம்.

''கோபி! இவ கிட்டேர்ந்தும், இந்த இடத்திலேர்ந்தும் தப்ப ஏதாச்சும் யோசனை செய்யி...'' என்று நான் கிசுகிசுத்தேன்.

''என்னடா அவசரம்? என் ஆராய்ச்சிக் கூடத்தைவிட இது ரொம்ப வசதியா, நிறைய உபகரணங்களோட இருக்கு பாரு. சந்தடி சாக்குல என்னோட சொந்த ஆராய்ச்சியை இங்கேயே முயற்சிக்கிறேன்...''

''உன் ஆராய்ச்சில இடி விழ! அந்தப் பைத்தியக்காரத் தனத்தினால தான் மாட்டிக்கிட்டு முழிக்கிறோம். உனக்கு நம்மைச் சூழ்ந்திருக்கிற ஆபத்து புரியலையா?''

கோபி எங்களைச் சுற்றிப் பார்த்தான். ''எங்கேடா?'' என்றான்.

''அய்யோ! உன்னை வச்சிக்கிட்டு நான் என்ன செய்வேன்?''

''மின்சாரம் செய்யேன்...''

''கோபி, இப்போ நீ அந்த மருந்தைக் கண்டுபிடிக் கலைன்னா உன்னையும் என்னையும் இரக்கமில்லாமக் கொன்னுடுவாங்க...''

''கண்டுபிடிச்சாலும் ஃபார்முலா புரிஞ்சிக்கிட்டுக் கொன்னுடுவாங்க...''

''உளறாதே. எப்படி நீ கண்டுபிடிக்கப் போறே? எப்படி முடியும்?''

''பாரு தமாஷை!'' என்ற கோபி இன்ட்டெர்காம் எடுத்து, ''அந்த மருந்து தயாரிக்க சில சாமான்கள் இங்கே இல்லை...'' என்றான்.

''சொல்லுங்க உடனே கொண்டாறோம்'' என்றான் மொட்டை.

''தேக்கு மரத்தோட வேர் அரை கிலோ, பேரிச்சம் பழம் கொட்டை மட்டும் ஒரு கிலோ, துளசிப் பூ நூறு...''

''யோவ், விளையாடறியா?''

''ஃபார்முலால உள்ளதைச் சொல்றேன். தந்தா தாங்க. இல்லைன்னா நான் பாட்டுக்கு உக்காந்துக்கிட்டு இந்தக் காவல்காரக் குட்டியை சைட் அடிச்சிக்கிட்டிருக்கேன்...''

''சரி, கேட்டது எல்லாம் கொண்டார்றோம். மிச்ச வேலைங்களைப் பாருங்க...''

''தாரளமா...''

கோபி இப்போது அங்கே இருந்த சகல புட்டிகளையும் எடுத்து எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் குடுவையில் போட ஆரம்பித்தான்.

நான் காவல் பெண்ணிடம் ஸ்பீச் கொடுத்தேன்.

''உனக்கு எவ்வளவு சம்பளம்?''

''சாப்பாடு போட்டு அஞ்சாயிரம் ரூபா. பேட்டா தனி.''

''யூனியன் கூட இருக்கும் போலிருக்கே. உன் பேரென்ன?''

''காளியம்மா!''

''வேலைக்காரிங்கதானே அப்படி பேர் வச்சுக்குவாங்க. நீ ஜிம்மி, நிம்மின்னு பேர் வச்சுக்கலாமே... ரோஸ் மாதிரி இருக்குற உன் உதட்டுக்குப் பொருத்தமா ரோஸின்னுகூட வச்சிக்கலாம்...''

''நிஜமா என் உதடு ரோஜா மாதிரி இருக்குதா?'' என்று வெட்கப்பட முயற்சி செய்தாள்.

''போன வாரம் பூத்த ரோஜா மாதிரியே இருக்கு...''

''வாடின ரோஜாவா?''

''ஃப்ரிஜ்ஜுக்குள்ளே வச்சா வாடுமா? அது மாதிரி குளிர்ச்சியா இருக்கே நீ...''

''அதெப்படி தொடாமலேயே நான் குளிர்ச்சின்னு சொல்றீங்க?''

''தொட்டுப் பார்த்துச் சொல்லட்டுமா?''

''ம். இங்கே மட்டும்...'' என்று தன் சுண்டு விரலை



நீட்டினாள்.

''வேற சுவாரசியமான இடங்கள் எவ்வளவு இருக்கு? சரி, பரவாயில்லை'' என்று அவள் சுரண்டு விரலைத் தொட்டு உடனே 'ஆ!' என்று கையை உதறிக் கொண்டேன்.

''என்ன ஆச்சு?''

''இவ்வளவு ஜில்லுன்னு ஐஸ் மாதிரி இருந்தா எப்படித் தொடறது?''

''நீங்க தமாஷாப் பேசறீங்க...''

''பாவம், நீயும் காய்ஞ்சு போயிப் பேசறே. இந்த வாட்ச் எங்கே வாங்கினே? நல்லா இருக்கே... எங்கே பார்க்கலாம்...''

உடனே கழற்றிக் கொடுத்தாள். நான் அதை புரட்டிப் புரட்டிப் பார்த்துவிட்டு, ''நல்லா செலக்ட் செஞ்சிருக்கியே... இந்தா'' என்று திருப்பிக் கொடுத்தேன்.

அப்புறம், ''இந்தச் செயின்கூட நல்லா இருக்கு'' என்று அதையும் வாங்கிப் பார்த்து திருப்பிக் கொடுத்தேன்.

அப்புறம் இயல்பாக, ''இந்தத் துப்பாக்கி வெளி நாட்டுதா, உள்நாட்டுதா?'' என்று பார்ப்பதற்குக் கை நீட்ட...

அந்த அசடு தன் தோளில் இருந்து அந்த மெஷின் கன்னை கழற்றித்தர... அதை வாங்கிக் கொண்டதும், ''ஹேண்ட்ஸ் அப்!'' என்றேன்.

''விளையாடறீங்க சார், கொடுங்க...''

''அட! சீரியஸாச் சொல்றேன் காளியம்மா. கையைத் தூக்கு. இல்லைன்னா சுடுவேன்...''

அவள் வெலவெலத்துப் போனாள். இதை எதுவும் அறியாத கோபி சீரியஸாக எதை எதையோ கலந்து கொண்டிருக்க, சிகப்புக் கலரில் புகை புகையாக வந்தது.

''கோபி, இங்கே பார், மெஷின் கன்''

''இருடா, வர்றேன்'' என்றான் சீரியஸாக சிந்தித்துக் கொண்டு.

''இங்கே பாருடான்னா!''

பார்த்துவிட்டு, ''பாவம்டா! விட்டுடுடா. எதுக்கு அந்தப் பொண்ணை பயமுறுத்தறே?'' என்றான்.

''முட்டாள்! அவளை மடக்கி வச்சிருக்கேன்டா. இவளை வச்சி நாம் தப்பிச்சிடலாம். இங்கே வா.''

''அட! அப்படிக்கூடச் செய்யலாமில்லே?'' என்று வந்தான்.

''காளியம்மா, இது எந்த எடம்? முதல்ல அதைச் சொல்லு...''

''சொல்ல மாட்டேன். என் உயிர் போனாலும் அதுக்கப்புறமும் சொல்ல மாட்டேன்...''

''மண்டு! உயிர் போனதுக்கப்புறம் எப்படிச் சொல்ல முடியும்? அதனால இப்பவே சொல்லிடு. இது எந்த ஏரியா?

எந்தத் தெரு? டோர் நம்பர் என்ன?''

''சொல்றேன், சொல்றேன்...'' என்ற காளியம்மா, திடீரென்று தன் சட்டைப் பாக்கெட்டில் இருந்து ஒரு மாத்திரையை எடுத்தாள்.

''தொண்டை அடைக்குதா? சரி, மாத்திரையைச் சாப்பிட்டுட்டு அப்புறம் சொல்லு, பரவால்லை...''

அவள் மாத்திரையை விழுங்கினாள். சில வினாடிகளில் கண்கள் செருகக் கீழே சரிந்து விழுந்து இறந்து போனாள்.

கோபி உடனே குந்தி உட்கார்ந்து, ''என் ராணி! சொல்றேன்னு சொல்லிட்டுச் சொல்லாமலேயே போய்ட்டியே... என் ரோஜா! மாத்திரையைச் சாப்பிட்டுட்டு எந்திரிக்க முடியாத நித்திரைக்குப் போய்ட்டியே... என் செல்லம்!'' என்று ராகமாக ஒப்பாரி வைக்க ஆரம்பித்தான்.

''என்னடா இது! அவ உன் காதலியும் இல்லை, மனைவியும் இல்லை. அட்லீஸ்ட் கள்ளக் காதலியும் இல்லை. இப்படி ஒப்பாரி வைக்கிறியே... எந்திரிடா, தப்பிக்கணும் நாம்...''

''யாரா இருந்தா என்னடா? பொம்பளை உசிரு! பாவம்... வாழ்க்கையிலே இவ என்ன சுகத்தைக் கண்டாளோ, இல்லை காணலையோ! ரெண்டு ஆம்பளைங்க இருக்கோம். அவ கடைசி ஆசையைக் கூடக் கேக்கலையே...''

அவன் புலம்பிக் கொண்டு இருக்க, அந்த ஆராய்ச்சிக் கூடத்தில் ஒரு போன் இருப்பதைக் கவனித்தேன். நேராகச் சென்று ரிசீவரை எடுத்து 100 சுழற்றினேன்.

''சார், போலீசுக்குப் போன் பண்ணணும்'' என்றேன்.

''அதான் பண்ணிட்டியே... என்ன, சொல்லு...''

''அவசரத்திலே எதுவும் புரியலை. ஒரு ஃபர்ஸ்ட் கிளாஸ் கொள்ளைக் கும்பல் ஒண்ணு இருக்கு சார். இது பம்பாய்ல பிராஞ்ச் ஆஃபீஸ் எல்லாம் வச்சிருக்கு. என்னையும், என் ஃபிரெண்டையும் இங்கே சிறை மாதிரி வச்சிருக்காங்க. இவங்களைப் பிடிச்சு எங்களைக் காப்பாத்துங்க. கடைசிக் கட்டம் வந்துடிச்சி. வானத்தை சுட்டுக்கிட்டு ஜீப்புல வருவீங்களே... சீக்கிரம் வந்து சேருங்க...''

''இருய்யா. நீ எங்கேர்ந்து பேசறே?''

''இங்கேர்ந்துதான் பேசறேன்...''

''அந்த எடம் எங்கே இருக்கு?''

''இங்கதான் இருக்கு. மெட்ராஸ்லதான். ஆனா அட்ரஸ் தெரியலை...''

''அட்ரஸ் தெரியாம எப்படி நாங்க வர்றது?''

''சினிமால மட்டும் அதெல்லாம் சொல்லாம டான்னு



வந்துடறீங்களே, எப்படி?''

''மறை கழண்ட கேஸ் போலருக்கு...''

''அதெல்லாம் மறை டைட்டாத்தான் இருக்கு. பெரிய ஆபத்து சார், வாங்க...''

''வாங்க, வாங்கன்னா எப்படிய்யா வர்றது? போன்ல நம்பர் இருக்கா?''

''இல்லே, டயல்தான் இருக்கு. அதில் சில நம்பர்கள் இருக்கு. சொல்லட்டுமா?''

''சீக்கிரம் சொல்லு...''

''குறிச்சிக்கிங்க. ஜீரோ, ஒம்போது, எட்டு, ஏழு, ஆறு, அஞ்சி, நாலு, மூன்று, ரெண்டு, ஒண்ணு. அவ்வளவுதான்!''

''ச்சை! உன்னோட பெரிய எழவா இருக்கே...''

''இங்கேயும் ஒரு எழவு விழுந்துடிச்சி சார். காளியம்மா மாத்திரை சாப்பிட்டுட்டுச் செத்துட்டா...''

''பைத்தியக்கார ஆஸ்பத்திரிலேர்ந்து பேசறியா தம்பி?''

''நான் உண்மையா நடந்ததைப் பேசறேன். பைத்தியம்னு சொல்றீங்களே... இன்னும் சில விவரங்கள் தர்றேன் சார்...''

''தாங்க சார்.''

''பம்பாய்ல பிரபல விஞ்ஞானி சோன்பப்டா கொலை செய்யப்பட்டாரா?''

''ஆமாம். அவன் பிரபல விஞ்ஞானி இல்லை. போலி விஞ்ஞானி. ஊரை ஏமாத்திட்டுத் திரிஞ்சான். எவனோ கொன்னு ரோட்ல வீசிட்டான்.''

''அந்தக் கொலையைச் செஞ்சது இந்தக் கும்பல்தான். அந்தப் போலி விஞ்ஞானி சாகறதுக்கு முன்னாடியும் ஏமாத்திருக்கான். எய்ட்ஸ்க்கு மருந்து கண்டுபிடிக்க ஃபார்முலான்னு ஒண்ணு கிறுக்கி இந்தக் கும்பல் கிட்டே கொடுத்திருக்கான். பல சர்க்கஸ் வேலை செஞ்சி அது எனக்குக் கிடைச்சுது. அது இப்ப சின்ன சாவித்ரி வீட்டு பாத்ரூம்ல இருக்கு...''

''யோவ்! ஏன்ய்யா இப்படி அறுக்கறே? எல்லாம் பொய்யா, மெய்யா? சரி, புறப்படலாம்னா எங்கய்யா வரச் சொல்றே? கதை கதையா சொல்லிக்கிட்டுப் போறியே ஒழிய... நீ இருக்கிற எடத்தைப் பத்தி ஏதாச்சும் அடையாளம் சொல்லேன்யா...''

''சொல்றேன். என்னைச் சுத்தி ஒரே குடுவைகள். ஒரு குடுவையிலேர்ந்து சிவப்புப் புகை வருது. நெடி அடிக்குது. உங்களுக்கு அடிக்குதா?''

''எனக்கெப்படிய்யா அடிக்கும்?''

"ஏன், ஜலதோஷமா? அப்படின்னா வாசனை தெரியாதுதான்..."

"யோவ், நீ இருக்கிற இடத்திலே இருக்கிற ஜன்னல் வழியா வெளில பாரு. என்ன உன் கண்ல படுதோ, அதைச் சொல்லு..."

"இது புத்திசாலிக் கேள்வி. இருங்க... கோட்லயே இருங்க, வர்றேன்..."

"கோட்லியா?"

"இங்கிலீஷ்லதான் சொல்லணுமா? சரி, லைன்ல இருங்க..."

நான் அருகில் இருந்த ஜன்னல் கதவுகளை விரியத் திறந்து வைத்து ஒரு டைரக்டர் கோணத்தில் எட்டாப் பக்கங்களிலும் பார்த்துவிட்டு போனுக்குப் போகும் வழியில் கோபியைக் கவனித்தேன்.

அவன் காளியம்மாவின் ரிஸ்ட் வாட்ச்சைக் கழற்றி தன் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு ஒரு கை கூழாங்கற்களை அள்ளிப் போட்டுக் கொண்டு, "நான் ரெடி தப்புறதுக்கு" என்றான்.

நான் போனை எடுத்து, "சொல்லட்டுமா சார்?" என்றேன்.

"சொல்லுப்பா சீக்கிரம்..."

"தந்திக் கம்பத்திலே மொத்தம் பதினேழு கம்பிகள் போகுது. அது மேல இந்த நிமிஷம் முப்பத்தி ஆறு காக்கா உக்காந்திருக்கு. ஒரு வீட்டு மாடியிலே வரிசையா ஒம்போது பிரா காயுது. கடல்ல எட்டு தோணி மிதக்குது. நிறையத் தென்னை மரம் இருக்கு. என்னால அறுபது வரைக்கும்தான் எண்ண முடிஞ்சுது..."

"இதெல்லாம் பத்தாதுப்பா..."

"பத்தாதுன்னா அதுக்கு நான் என்ன செய்ய முடியும்? உள்ள மரத்தை நான சொல்றேன். என்னைப் புதுசா நடச் சொல்றீங்களா?"

"போனை வைய்யா..."

"என் இஷ்டம். கொஞ்சம் நேரம் கழிச்சி வைப்பேன். உங்களுக்குக் கை வலிச்சா நீங்க வச்சிடுங்க. மெனக்கெட்டு எண்ணி இவ்வளவு விவரம் சொல்றேன். அப்புறம் பத்தாதுன்னா... என்ன போலீசுங்க நீங்க..." எதிர்முனை வைக்கப்பட்டும்கூட, நான் இரண்டு நிமிடம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வைக்கப் போன சமயத்தில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த மொட்டை, காட்சியமைப்பைப் பார்த்து விட்டு அலறினான்.

"யாருக்கு போன் செஞ்சே?"

"போலீசுக்கு. இப்போ வந்துடும்!" என்றுவிட்டு, "நீ



கையைத் தூக்கு" என்று துப்பாக்கியைக் குறிபார்க்க... அவன் கையைத் தூக்காமல் வேகமாக ஆராய்ச்சிக் கூடத்தை விட்டு வெளியேறி, கதவை வெளிப்பக்கமாகச் சாத்திவிட்டு ஓடினான்.

அடுத்த சில நிமிடங்களில் அந்தக் கட்டிடம் முழுக்க அலாரம் அடித்தது. யாரோ ஓடும் சத்தங்கள்.

"கோபி, போலீஸ் வரவே வராது. அது வந்துடும்னு நினைச்சி இவங்க அவசரமா இடத்தைக் காலி செய்றாங்க போலிருக்கு..." என்றேன்.

"செய்யட்டும். அவங்க காலி செஞ்சதும் நான் வாடகைக்கு எடுத்துக்கலாம்னு நினைக்கிறேன். என் ஆராய்ச்சிக்கு இந்தக் கூடம் வசதி."

"புரியாத ஆளா இருக்கியே... அந்தத் தலைவனும் கும்பலும் தப்பிடும்டா..." என்ற நான் ஜன்னல் கம்பி வழியாகப் பார்த்தேன்.

அந்தக் கட்டிடத்தின் சைடுப் பகுதியில் ஒரு வேனில் சக்கர நாற்காலியுடன் தலைவரை ஏற்றி, ஏழெட்டு பெரிய பெட்டிகளை ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

"கோபி! ஏதாச்சும் செஞ்சி இங்கேர்ந்து தப்பி அவங்களைப் பிடிச்சி போலீசில கொடுக்கணும்..."

"இங்கேர்ந்து மெஷின் கன்னால அந்த வேன் டயரைச் சுடுடா..."

"வாகு இல்லை. ரொம்பவும் தூரம்."

"சரி, இந்த ஆராய்ச்சிக் கூடத்தோட வாசல் கதவைச் சுடு"

நான் சுட்டேன். சரமாரியாக தாழ்ப்பாள் இருக்கும் பகுதியைச் சுட்டதும், ஒற்றைக் கதவு அப்படியே டம் என்று விழுந்தது. இரண்டு பேரும் வேகமாக வெளியேறினோம். யாரையும் காணோம். கட்டிடத்தின் வாசலுக்கு வந்தோம்.

தூரத்தில் அந்த வேன் போய்க் கொண்டிருந்தது.

கொஞ்ச தூரத்தில் ஒரு ஹெலிகாப்டர் இருந்தது. அதன் பைலட் அதை ஓரமாக நிறுத்திவிட்டு சாலையோரம் பாரம் இறக்கிக் கொண்டிருக்க...

"வாடா நந்துப் பயலே, திஸ் ஈஸ் க்ளைமாக்ஸ்" என்று கோபி வீரமாய் ஓடி அந்த ஆசாமியைப் பாதி காரியத்தில் கழுத்தைப் பிடித்தான்.

"ஹெலிகாப்டரை எடுய்யா. இல்லைன்னா சுட்டுடுவேன்..."

நாங்கள் இருவரும் ஏறிக் கொள்ள, ஹெலிகாப்டர் உடனே பறக்க வைக்கப்பட்டது துப்பாக்கி முனையில்.

வேனை நாங்கள் ஹெலிகாப்டரில் துரத்தினோம். கீழே இறங்கி தாழ்வாய் வ_தபோது கோபி வேன் மேல்

எச்சில் துப்பினான். நான் வேனின் டயரைச் சுடுவதாக நினைத்துத்தான் நிறைய சுட்டுக் கொண்டே வந்தேன். அதில் எசகுபிசகாக ஒரு குண்டு வேனின் டயரைக் கிழித்துவிட, வேன் கோணல் மாணலாய் ஓடி...

ஒரு போலீஸ் ஜீப்பில் இடித்துக் கொண்டு நின்றது.

போலீஸ் ஜீப்பில் இருந்து நிறைய போலீஸ் இறங்கியது.

''ஹெலிகாப்டரை இறக்குய்யா'' என்றோம்.

இறங்கினதும் போலீஸ் எங்களையும் கைது செய்ய வந்தது.

''சார், நான் கொடுத்த தகவலாலதான் நீங்க வந்தீங்க. எவ்வளவு பெரிய கூட்டத்தைப் பிடிச்சிக் கொடுத்திருக் கோம். எங்களை ஏன் அரெஸ்ட் செய்றீங்க?''

''அதெல்லாம் சரி. பிரதம மந்திரி வந்த இராணுவ ஹெலிகாப்டரை இப்படி மிரட்டி எடுத்ததும் இல்லாம... மேலேர்ந்து நீங்க கன்னாபின்னான்னு சுட்டதிலே ரோட்ல போன முப்பத்தி ஏழு பேர் செத்துப் போய்ட்டாங்க.''

''அவ்வளவுதானே சார்? ஒரு தீயவன் அழிக்கப் படறப்போ சில நல்லவர்களும் அழிக்கப்படறது சகஜம். இராமாயணப் போரில் இலங்கேஸ்வரன் மட்டுமா அழிஞ்சான்? ராமர் சைடுல எவ்வளவு பேர் செத்தாங்க?''

-என்று எவ்வளவோ வாதம் செய்தேன். அதை எல்லாம் ஏற்றுக் கொள்ளாமல் எங்களை மத்தியச் சிறைச் சாலையில் வைத்து வழக்குப் போட்டிருக்கிறார்கள். எங்கள் சார்பாக எங்கள் வக்கீல் ஜனாதிபதிக்கு அனுப்பத் தயாரித்துக் கொண்டிருக்கும் கருணை மனுவில் கையெழுத்துப் போட வருவீர்களா, ப்ளீஸ்?

<u>கடைசிச் செய்தி</u>!

சேட்டை கோபி இங்கே ஜெயிலில் கல் உடைக்க அழைத்துச் செல்லப்படும் போது இப்போதும் கூழாங் கற்கள் சேகரித்துக் கொண்டுதான் இருக்கிறான்.

○



போனஸ் கமெண்ட் கந்தசாமி

யாருய்யா அந்த அப்பா...?
குழந்தைக்கு நல்ல பழக்கத்தைக்
கத்துக் குடுக்கச் சொன்னா...
இப்படியா பண்றது?